ADVERTISEMENT
RECOMMENDATION
REWARD OF $75 CASH
IS AVAILABLE FOR EVERY BODY, WHO RECOMMENDS
NEW SMALL BUSINESS AND BUSINESS ARE ADERTISED THROUGH US
PHONE : 647 333 25 76
8130 Sheppard Ave E Unit208, Scarborough, ON

கனடாவிலிருந்து மாதமிருமுறை வெளிவரும் நமக்கான தமிழ் செய்திப் பத்திரிகை Est. 2018 இலவச இதழ்

REGISTERED NEWPAPER IN CANADA
www.puthiyakural.ca

புதிய குரல்

PUTHIYAKURAL

PUTHIYAKURAL NEWSPAPER IN ONE OF THE LEADING TWICE A MONTH NEWSPAPER IN CANADA

மலர் - 01 30 டிசெம்பர் 2023 இதழ் - 04 பக்கங்கள் 14

TUTORING
RECOMMENDATION
REWARD OF $75 CASH
IS AVAILABLE FOR EVERYBODY, AND STUDENT ID WITH US
PHONE : 647 333 25 76
8130 Sheppard Ave E Unit208, Scarborough, ON



இமாலய பிரகடனம் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் முயற்சி:

பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன்

ரொரன்டோ, டிசெ.30

உலக தமிழ்பேரவையும் (GTF) கனேடிய தமிழ் காங்கிரசும் (CTC) தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளதாக கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் (Patrick Brown) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடி வந்துள்ளனர். 2009 இல் இனப்படுகொலை உச்சக்கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடுரமான குற்றங்களிற்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் இன்றி அமைதி சமாதானம் சாத்திய மில்லை. ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை ஆதாரங்களை சேகரித்துவருவது டன் இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிரான விசாரணைகள் உட்பட சாத்திய மான மூலோபாயங்களை முன்வைக்கவுள் ளது.

கனடாவின் பிரம்டன் நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளானார்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

சரித்திரம் சாய்ந்தது;

ஈழத்தமிழர்களுக்காக வாழ்வில் பிறந்தநாள் கொண்டாடாத தலைவர் விஜயகாந்த மறைவு!



புதிய குரலின் ஆழ்ந்த இரங்கல்

ரொரன்டோ, டிசெ.30

72 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் மறைந்த நடிகரும்இ தே.மு.தி.க. நிறுவனத் தலைவருமான விஜயகாந்த் உடல் அவரது கட்சி அலுவலகத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தினர். ஈழத்தில் தமிழர்கள் கஸ்டப்படும் போது தான் பிறந்த நாள் கொண்டாடாமல் இருப்பதே சிறந்தது என்ற கொள்கையில் வாழ்நாளை கழித்தவர்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி

பெற முடியாது; க.வி.விக்னேஸ்வரன்

கொழும்பு, டிசெ.30

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுக்கு சாதகமாக களமிறங்கினாலே அன்றி ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்

இன்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்தரிக்கும் போது மேற்கண்டவாறு தெரி



மிகுதி 02 ஆம் பக்கத்தில்...



இலங்கையின் நலனுக்காக இணைந்து செயல்படுவேன்!

பிரதமருடனான சந்திப்பில் இந்திய தூதுவர்!

கொழும்பு, டிசெ. 30

நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கையின் நலனுக்காக - இலங்கை மக்களுடன் இணைந்து செயல்படுவதும் இந்திய - இலங்கை ஒத்துழைப்பு மற்றும் 14 படிநிலைகளை முன்னெடுத்துச் செல்வதே எனது பணி என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதுவராக புதிதாகப் பதவி யேற்ற சந்தோஷ் ஜா நேற்று வெள்ளிக் கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரிமாளிகையில் சந்தித்தார். இதன் போதே அவர்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

தமிழர்களை மடையர்களாக்கும் செயற்பாடே தமிழ் பொது வேட்பாளர்

சாணக்கியன் உண்மைகளை போட்டுடைத்தார்

கொழும்பு, டிசெ.30

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தை மிகவும் பேசும் பொருளாக மாற்றுவதற்கு தெற்கினுடைய அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முயற்சி எடுத்து வருகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

'யுக்திய' விசேட நடவடிக்கை; 17 ஆயிரத்து 837 பேர் கைது!

450 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றல்

கொழும்பு, டிசெ. 30

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "யுத்திய" நடவடிக்கையில் 12 நாட்களில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஹெரோயின், ஐஸ் உட்பட 450 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. இதில், 10 கிலோ ஹெரோயின்,

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

தமிழர்களை...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விட யத்தை மிகவும் பேசும் பொருளாக மாற் றுவதற்கு தெற்கினுடைய அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

தமிழ் வேட்பாளர் விடயம் தொடர் பில் தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துகள் தொடர்பில் தென்னிலங்கை ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து அவதானித்து வருகின்றன. அது தொடர்பில் தொலை பேசி ஊடாக என்னிடம் பல அழைப்பு கள் வந்து கொண்டிருக்கிறது. இதனை பார்க்கும் போது தெற்கிலே இருக்கும் பேரனிவாத சக்திகள் தமிழ் பொதுவேட் பாளர் விடயத்திற்கு அதிக முக்கியத்து வம் வழங்குவதன் ஊடாக அதனை பிரபல்யப்படுத்துவதாக தெரிகிறது.

இதற்கு பின்னணியில் உள்ளவிடயங் களை நாம் பேசியாகவேண்டும். ஜனா திபதி தேர்தலில் தமிழ் பொது வேட் பாளர் ஒருவரை நிறுத்துவது தமிழர் களை பொறுத்தவரை ஒரு துரும்புச் சீட்டு. ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்றி தனியே சிங்கள மாக்களது வாக்குகளினால் மட்டு ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் படலாம் என்ற நிலை காணப்படும் போது தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளை நிறுத்தி தமிழ் மக்களுடைய விடயங் களை முன்னிறுத்தி அதற்கு ஆணை கோரும் சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதனை நாங்கள் மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும். ஒரு முறைதான் செய்யலாம். அதனை ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நியமித்து மக்களிடம் வாக்களிக்குமாறு கோரமுடி யாது.

தற்போது கடந்த சில வாரங்களாக இது தொடர்பில் கருத்து தெரிவித்து வருபவர்கள் யாரென்று பார்த்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் தான் இவ்வாறு தெரிவித்து வருகின்ற னர். எல்லோரும் இணைந்து கோட்டால் தமிழ் பொது வேட்பாளராக போட்டிய தயாராக இருப்பதாக முன்னாள் நீதியர சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கருத்து தெரிவித் திருந்ததை பார்க்ககூடியதாக இருந்தது.

விக்னேஸ்வரன் ஐயாவினுடைய கடந்த ஒன்றரை வருட கால செயற்பாடு களை அவதானித்து பார்த்தால் 2022 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டபோது ஆதரவாக

ரணில்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் 2024 ம் ஆண்டு எந்த தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது

முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடாத்துவதற்கு வாய்ப்பு இல்லை ஏனென் றால் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் கள் தற்போதைய ஜனாதிபதியை தொடர்ந்து இருக்க அனுமதிக்க மாட் டார்கள் என்ற நிலைப்பாட்டினால் ஜனாதிபதி தேர்தல் தான் முதலில் நடக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது

அப்படி நடந்தால் கூட நான்கு பிர தான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாக களமிறங்க கூடும் அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவரி னால் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்கினை பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும்

அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவாரா என்ற கேள்வி எழுகின்றது? ரணில் ஜனாதிபதியாக வரவேண்டுமாக இருந்தால் மொட்டு கட்சியின் வேட்பா ளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு சாதகமாக அமைந்தால் மாத்திரமே ரணில் விக்ரம சிங்கவினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும் எனவும் தெரிவித்தார்.

வாக்களித்தவர். அதனைத் தொடர்ந்து ஜனாதி நடத்திய சர்வகட்சி மாநாட்டின் போது இவருடைய கையிலும் ஜனாதி பதியுடைய கையிலும் பேசப்படப்போ கின்ற விடயம் தொடர்பில் ஒரே ஆவணம் இருந்தது. இது அவர்கள் இருவருக்கு மான நெருங்கிய உறவினை வெளிப்படுத் துகிறது. பாராளுமன்ற வாக்கெடுப்பு களின் போதெல்லாம் ஒன்றில் கலந்து கொள்ளாமல் இருந்திருப்பார். இல்லா விட்டால் ஆதரவாக வாக்களித்திருந் தார். ஒருபோதும் எதிராக வாக்களித் திருக்கவில்லை.

அண்மையில் ஜனாதிபதி அழைத்த கூட்டத்திற்கு, மக்களுடைய கோரிக்கை கள் எதனையும் ஜனாதிபதி நிறைவேற்ற வில்லை என்ற காரணத்தினால் கலந்து கொள்ளப்போவதில்லை என கூறி சி. வி.விக்னேஸ்வரன் ஐயா அறிவித்திருந் தார். இதன் மூலம் தான் ஜனாதிபதிக்கு எதிரானவர் என்பதனை மக்களுக்கு காட்டுவதற்கு முற்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த பின்னணியில் தான் தமிழ் பொதுவேட்பாளராக அழைத் தால் போட்டியிட தயார் என அவர் கூறியதை பார்க்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டி யிடுவதற்கு அனுரகுமார திசநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் அவரவர் கூட்டணி சார்பில் போட்டி யிடப ண்போவதாக பகிரங்கமாக கூறியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் மீதமாக இருக்கும் ரணில் விக்ரமசிங் கவுக்கு ஐதேக சார்பில் அல்லது பெர முன சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக

'யுக்திய' விசேட...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

6 கிலோ ஐஸ், 288 கிலோ கஞ்சா, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 கஞ்சா செடிகள், ஒரு கிலோ ஹஷீஷ் போதைப் பொருள், 18 கிலோ மாவா, 71 ஆயிரத்து 271 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

மேலும், கைதானவர்களில் 850 பேர் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர். அத்துடன், 186 பேருக்கு எதி ராக சட்ட விரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் ஆயிரத்து 187 பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் கள் என்றும் இவர்கள் புனர்வாழ்வு மையங் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 4,665 சந்தேக நபர் களில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்றும் பொது மக்கள் பாது காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இமாலய...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

ளன. எனினும் உலகதமிழர் பேரவை (GTF) கனேடிய தமிழ் காங்கிரசின் (CTC) ஆலோசனை குழுவின் உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட் படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளி களை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இது நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஒரு அடி பின்னோக்கிய நடவடிக்கையாகும். தமிழ் மக்களிற்கு எதிரான மிகமோசமான குற்றங்களிற்காக கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள யுத்த குற்றவாளியும் முன்னாள் ஜனாதி பதியுமான மகிந்த ராஜபக்சவுடன் கனேடிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக்கொண்டமை அதிர்ச் சியை ஏற்படுத்துகின்றது.

உலகதமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் இந்த நடவடிக்கைகளை நான் கடுமையான கண்டிக்கின்றேன், கனேடிய தமிழ் அமைப்புகளும் கனடா அரசாங்கமும் தமிழ் மக்களின் நீதி பொறுப் புக்கூறலிற்கு தீர்வை காண்பதில் உரிய தார்மீகநிலைப்பாட்டை தெரிவு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

போட்டியிடும் நிலைதான் காணப்படு கிறது.

தற்போதைய சூழ்நிலையில் பொது ஜன பெரமுன சார்பில் வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கினால் பெரும்பான்மை இன சிங்கள மக்களை அவருக்கு வாக்களிக்குமாறு மகிந்த ராஜபக்ச பகிரங்கமாக சொல்ல வேண் டும். அவ்வாறு மகிந்த ராஜபக்சவின் நேரடி ஆதரவுடன் மொட்டு கட்சியின் வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க வேட்பாளராக களமிறக்கப்பட்டால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை என்பது உறுதியாக தெரியும். அதேபோன்று இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுடைய வாக்குகளும் அவருக்கு கிடைக்கிறது சந்தேகமாகும்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்னொரு வேட்பாளருக்கு போகாமல் தடுக்கும் நோக்கில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் கையிலெடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுகிறது. தமிழ் பொதுவேட்பாளர் கணிசமான தமிழ்

சரித்திரம்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

அமரர் விஜயகாந் என்பது குறிப்பிடத்தக் கது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வியாக்கிழமை (டிச.28) காலை கால மானார். மியாட் மருத்துவமனை யிலிருந்து கொண்டு வரப்பட்ட அவரது உடல் சில மணி நேரம் சாலிகிராமம் வீட்டில் வைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக கோயம்பேட் டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத் துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு கட்சித் தொண்டர்களும், ரசிகர்களும், பொதுமக்களும் குவிந்தனர். கூட்டத் தைக் கட்டுப்படுத்த முடியாமல் போலீ ஸார் திணறினர். இரவு வரை அங்கே வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் உடலுக்கு திரையுலகினர் பலரும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். இதனால் கோயம்பேட்டில் முழுவதும் கண்ணீர் கடலாக காட்சியளித்தது.

மேலும், கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் போதிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததால் நெரிசல் ஏற்பட்டது. இதனையடுத்து, விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதா னத்தில் அஞ்சலிக்காக நேற்று வைக்கப் பட்டது. மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டன. இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக் கான போலீஸார் ஈடுபட்டனர்.

இந்நிலையில், விஜயகாந்தின் உடல் கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்துக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு அங்கே இறுதிச் சடங்கு களுக்குப் பின் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. முன்ன தாக தீவுத்திடலில் தொடங்கிய இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தொண் டர்களும், பொதுமக்களும், ரசிகர்களும் கலந்துகொண்டு கண்ணீருடன் பிரியா விடை அளித்தனர்.

விஜயகாந்தின் உடல் வைக்கப் பட்டுள்ள வாகனத்தின் இருபுறமும் மக்கள் வெள்ளம்போல் திரண்டுள்ளனர். காவல் துறை பாதுகாப்புடன் மலர்களால் அலங்கரித்த வாகனத்தில் விஜயகாந்தின் உடல் எடுத்துச் செல்லப்பட்டது. இந்த வாகனத்தில் விஜயகாந்தின் மனைவி பிரேமலா மற்றும் அவரது மகன்கள் இருந்தனர். மேலும், தீவுத்திடலில் இருந்து ஈவேரா சாலை வழியாக கோயம் பேடு நோக்கி செல்லும் இந்த ஊர்வலத் தில் வழிநெடுங்கிலும் விஜயகாந்தின் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. இறுதி ஊர்வலம் சென்ற சாலைகளின் இருபுற மும் ஆயிரக்கணக்கான மக்கள் மறைந்த தலைவருக்கு கண்ணீர் மல்க தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

விஜயகாந்த்தின் நல்லடக்க நிகழ்வில் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்று காவல் துறை தெரிவித்திருந்தது. முக்கிய பிரமுகர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர் கள் 200 பேருக்கு மட்டுமே அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது. விஜய காந்த்தின் இறுதிச்சடங்கில் தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணி யன், தா.மோ.அன்பரசன், உதயநிதி ஸ்டாலின், தங்கம் தென்னரசு பங்கேற்ற னர்.

வாக்குகளை பிரித்தால் பெரும்பான்மை இன சிங்கள வாக்காளர்களது வாக்குகள் மூன்றாக பிளவுபடும் நிலை ஏற்பட்டு அவர்களுக்காகவே போட்டியிடும் நிலை ஏற்படும். இந்த பின்னணியில் தான் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபொருளாக்கி நாடிபிடித்து பார்க் கும் தந்திரத்தை ரணில் விக்கிரமசிங்க அரங்கேற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது.

தமிழ் பொதுவேட்பாளரை துரம்புச் சீட்டாக பயண்படுத்த வேண்டும் என்று நான் கூறிய விடயம் இன்று உள்ள சூழ லில் பொருத்தப்பாடில்லாத நிலையே காணப்படுகிறது. இன்று தமிழ் மக் களுடைய வாக்குதான் அடுத்த ஜனாதி பதியாக யார் என்பதை தீர்மானிக்க கூடிய இடத்தில் இருக்கிறது. இந்த பின்னணியில் இருந்து தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபவர்கள் குறித்து நாம் அனைவரும் மிகவும் கவன மாக இருக்க வேண்டும். அவர்களது உள்நோக்கங்களை பார்க்க வேண்டும். என மேலும் தெரிவித்தார்.

தேமுதிக அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்ட கேப்டன் விஜயகாந்தின் உட லுக்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன், தெலுங்கானா கவர் னர் தமிழசை சவுந்தரராஜன், ஓபிஎஸ், ஜெயக்குமார், ஜி.கே.வாசன்இமுன்னாள் மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். தேமுதிக அலுவலகத்திற்கு வெளியே திரண்டிருந்த தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள்இ செல்போன் டார்ச் லைட்டுகளை ஒளிரவிட்டு விஜயகாந்த் மீதான அன்பை வெளிப்படுத்தினர்.

இறுதிச்சடங்கில் பங்கேற்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விஜயகாந்த் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். முதல்வர் முன்னிலையில் அரசு மரியாதை அளிக்கப்பட்டது. 72 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதை அளிக்கப்பட்டது. 24 போலீசார் மூன்று முறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மரியாதை செலுத்தினர். பின்னர் சந்தனப் பேழை யில் வைக்கப்பட்ட விஜயகாந்த் உடலுக்கு அவரது மகன்கள் மற்றும் குடும்பத்தினர் இறுதிச்சடங்கு செய்தனர். பின்னர் அவ ரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இலங்கையின்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவான

விவாதம் நடைபெற்றதுடன், முன் மொழியப்பட்ட கூட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழிகள் மற் றும் வழி முறைகள் குறித்தும் விவாதிக் கப்பட்டது.

மற்றும் சூரிய சக்தி மற்றும் காற் றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிப்பதற் கான இந்தியாவின் திறன், எண்ணெய் சேமிப்பு தொட்டிகள், துறைமுகங்கள், திருகோணமலையில் ரயில்வே தொடர் பான கூட்டு திட்டங்கள் மற்றும் விவ சாயம் மற்றும் மீன்பிடி துறைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறன் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறு சீரமைப்பு வசதிகள் மற்றும் நிவாரண பொருட்கள், உணவு மற்றும் மருந்து களை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். பணப்புழக்க பிரச்னை களை தீர்க்க சர்வதேச நாணய நிதியத்தி டம் இருந்து உதவியை பெறுவதற்கு இந்தியா அளித்த ஆதரவிற்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2007 முதல் 2010 வரை இலங்கையில் பணியாற்றிய காலத்தை நினைவு கூர்ந் தார், இருதரப்பு நட்புறவையும் ஒத்து ழைப்பையும் மேலும் வலுப்படுத்து வதற்காக மீண்டும் ஒருமுறை கொழும் புக்கு வருவது பெரும் பாக்கியமாகக் கருதுவதாகவும் தெரிவித்திருந்தார்.

புதியகுரல்
எம்மை தொடர்பு கொள்ள: கலாநிதி பஹத் ஏ.மஜீத்
பிரதம ஆசிரியர், நிறுவுனர்
தொலைபேசி: +1437 329 1144
மின்னஞ்சல்: puthiyakuralcanada@gmail.com
புதிய குரல் நியுஸ்பேபர் பப்ளிகேசன் எல்.எல்.சி

தமிழ்மீதும் ஈழத்தமிழர்கள் மீதும் பெரும்காதல் கொண்ட புரட்சிக் கலைஞன்!

தே.மு.தி.க தலைவரும், நடிகருமான விஜயகாந்துக்கு யாரும் அறியாத எத்தனையோ பக்கங்கள் இருக்கிறது. அதேபோலத்தான் அவரின் தமிழ்மொழி மீதான பற்றும், தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்கள்மீது கொண்ட பாசமும் காதலும் அளப்பரியது.

விஜயகாந்த் தனக்கு 13 வயது இருக்கும்போதே மதுரையில் நடைபெற்ற 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டதாக தகவலும் சொல்லப்படுகிறது. சிறுவயதிலேயே தமிழ்மீது கொண்ட அந்தப் பற்றுதான் திரைக்கலைஞனான பின்னும் வளர்ந்து, தமிழர்களுக்காகப் போராடவும் தூண்டியது. குறிப்பாக, 1980களின் பிற்பகுதியில் இலங்கையில் ஈழத்தமிழர்கள்மீது சிங்களவர்கள் புரிந்த கொடூரமானத் தாக்குதலில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதைக் கண்டு கொதித்தெழுந்த விஜயகாந்த், ஈழத்தமிழர்கள் மீதானப் படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தினார். அதுமட்டுமல்லாமல் இந்தப் படுகொலையை நிறுத்த வேண்டும், ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டும் எனக்கோரி அப் போதைய தமிழ்நாடு ஆளுநரிடம் மனுவும் அளித்தார்.

பின்னர், 1986ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வந்ததால், அதை தடுக்கவேண்டும் எனக்கோரி சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் ரசிகர் மன்றத் தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தது மட்டுமல்லாமல் தமிழ்நாடு முகாம்களில் அகதிகளாக தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தார். குறிப்பாக, 1989களில் மண்டபம் முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு நேரில்சென்று உதவிபுரிந்தார்.

எல்லாவற்றுக்கும் ஒருபடி மேலே சென்று, ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களுக்காக தனது பிறந்தநாள் கொண்டாடுவதையே தவிர்த்தார். ஈழத்தமிழர்கள் அழும்போது, என்னால் கொண்டாட் டத்தில் இருக்க முடியாது என்று ஈழத்தமிழர்களின் வலியை உணர்ந்தவராக உணர்ச்சிப்பூர்வமாகப் பதிலளித்தார். பின்னாள் களில் அவரின் பிறந்தநாள் வறுமை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஈழத்தமிழர்கள்மீதான பற்றைப்போலவே, தனித் தமிழீழப் போராட்டத்தை முன்னின்று நடத்திய விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மீதும் அளவுகடந்த அன்பையும் மரியாதையையும் கொண்டிருந்தார். அதன் சாட்சியாக தனது மூத்த மகனுக்கு ஹவிஜய பிரபாகரன்' என பெயர்வைத்து விடுதலைப்புலி களின் தலைவர் பிரபாகரன் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற்றினார். மேலும், தனது 100ஆவது படத்துக்கு வைத்த ஹகேப்டன் பிரபாகரன்' என்ற பெயர்தான், அவரின் அடைமொழியாக நின்று இன்றுவரை அனைவராலும் அன்போடு ஹகேப்டன்' என அழைக்கப்படுகிறார்.

2009-ம் ஆண்டில் ஈழ இனப்படுகொலை நிறுத்தவேண்டும் எனக்கோரி அவர் நடத்தியப் போராட்டங்கள் ஏராளம். கடல்கடந்த ஈழத்தமிழர்கள்மீதே அத்தனை பரிவு என்றால் கண்களோடு நிற்கும் தமிழ்நாட்டுத் தமிழர்கள்மீதான அவரின் காதலை சொல்லிமாளாது. 2002ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து ஹநீர் தராத கர்நாடகாவுக்கு மின்சாரம் இல்லை!' என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலிக்கே சென்று நடத்திக் காட்டினார்.

எல்லோரும் மாநிலம், மொழிகடந்து தனது திரைப்படத்தைப் பார்க்க வேண்டும், ரசிகர்களை அள்ளிக்குவிக்க வேண்டும் பான் இந்தியா ஸ்டாராக வேண்டும் என எண்ணி தனது ரசிகர் மன்றப் பெயருக்கு முன்னால் அகில இந்திய என்ற முன்னொட்டை வலிந்து சேர்த்துக்கொள்வார்கள். ஆனால் விஜயகாந்தோ, ஹதென்னிந்திய, அகில இந்திய என்றிருந்த தனது ரசிகர் மன்றத்தின் பெயரை 1982 இலேயே ஹதமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றம்' எனப் பெயர் மாற்றம் செய்தவர்.

விஜயகாந்த் தமிழர்கள் மீதும் தமிழர்கள்மீதும் கொண்ட பாசமும் பற்றையும் நினைவு கூர்ந்து, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் அவரின் இறுதி பயணத்தை கண்ணீர்ததும்ப உணர்ச்சியுடன் வழியனுப்பி வைக்கிறார்கள்!

சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு வடக்கில் இந்தியா உதவிகள் வழங்கும்



துணை தூதுவர் ராகேஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு இந்தியா உதவிகளை வழங்கும் என யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணை தூதுவர் ராகேஸ் நட்ராஜ் தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இந்தியத் துணை தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுகலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்த சிறிய நடுத்தர வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவை பொறுத்தவரை சிறிய நடுத்தர உற்பத்தியாளர் 40 வீதமான பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பை செய்கின்றார்கள்.

அதேபோல், ஏற்றுமதியில் 50 வீதமானவை சிறிய நடுத்தர உற்பத்தி ஏற்றுமதியில் பங்களிப்பை செய்கின்றன. அது மட்டுமன்றி வேலைவாய்ப்பு வழங்குவதிலும் இவர்களே முன்நிலையில் உள்ளார்கள்.

அவ்வாறான நிலையில் இலங்கையில் வடக்கு மாகாணத்திற்கும் சிறிய நடுத்தர உற்பத்தியாளர் கள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகை யில் தமது உற்பத்தியின் தரத்தை மேப்படுத்த வேண்டும். இந்தியா அதற்கான உதவிகளை வழங்கும் பொருளாதார உற்பத்தியில் சரியான நடைமுறைகளை பின்பற்றி தரநிர்ணயங்களை செய்வதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி கொள்ளமுடியும்.

இந்த கண்காட்சியில் 140க்கும் மேற்பட்ட விற்பனை காட்சிக் கூடங்கள் உள்ளன. இவை இன்னும் தரமாக கவர்ச்சிகரமாக இருக்கும்போது இந்தியாவுக்கோ, ஐரோப்பாவுக்கோ ஏற்றுமதி செய்யும் போது பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும்.

இத்தகைய கண்காட்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும்போது தொடர்பாடல்கள் அதிகரிக்கும். இவைதொடர வேண்டும்-என்றார்.

யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் உரையாற்றுகையில், "சிறிய நடுத்தர முயற்சியாளர்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் வடக்கில் உள்ள உற்பத்தியாளர்களை ஏனையவர்கள் அடையாளம் கண்டு கொள்வதற்காக இந்த கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இவர்கள் பங்களிப்பு முக்கியமானது. இந்த முயற்சியாளர்களை அடுத்த கட்டத்துக்கு தமது பொருட்களை கொண்டு செல்வதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புகளை செய்வதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டும்.

இந்தியாவின் உதவி தேவையானவர்கள் வணிகர் சங்கத்தையோ அல்லது இந்திய துணைத் தூதுவராலயத்தையோ தொடர்பு கொள்ள முடியும். இந்த கண்காட்சியை ஒவ்வொரு வருடமும் நடாத்துவதற்கு எண்ணியுள்ளோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஒரு டெங்கு மரணம்; அபாயத்தில் யாழ்ப்பாணம்

அச்சுவேலி இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலி தோப்பு பகுதியை சேர்ந்த ரவிச்சந்திரன் சாரூரன் (வயது 23) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் மூளைச் சாவடைந்திருந்தார்.

தொடர்ந்து இளைஞனுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டு வந்த நிலையில் , சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்தார்.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலை யில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 71 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

ஏற்கனவே, டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு காரணமாக இரண்டு விடுதிகள் புதிதாக திறக் கப்பட்டுள்ளன. குழந்தை நோயாளர் விடுதியும் நிரம்பி உள்ளது என வைத்தியசாலை பணிப்பளார் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 11 மாதக் குழந்தை ஒன்று டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்தது. கடந்த சனிக்கிழமை டெங்கு காய்ச்சலுக்கு உள் ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவி ஒரு வருக்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமை ஏற்பட் டமையால் அவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும்

கோருகிறார் கஜேந்திரகுமார்

மட்டக்களப்பு, டிசெ. 30

தமிழர்களின் அரசியல் உரிமையை ஒற்றை யாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ் தரப்புகள்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என கோரிவருகின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் இந்த தேர்தலை பகிஷ் கரிப்பது தான் தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே யொரு தெரிவு என்றும் அதனையே தாம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கள தரப்பில் இனிமேலும் தொடர்ச்சியாக வாக்களித்து நாங்கள் ஏமாறக்கூடாது என்கின்ற ஒரு தெளிவான செய்தியை இந்த தேர்தலில் உலகத்திற்கு காட்ட வேண்டும் என்கின்ற உறுதி யான நிலைப்பாட்டோடு தமிழ் மக்கள் இருக் கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ட்ரூடோவுக்கு சிக்கலாக வந்த கருத்துக்கணிப்பு!

ரொரன்டோ, டிசெ.30

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதமர் மற்றும் லிபரல் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கான நேரம் இது என்று பெரும்பான்மையான கனேடியர்கள் கருதுவதாக கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளது.

ஆய்வமைப்பான ஜிளழள நிறுவனம், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆய்வொன்றை நடத்தி அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

மேலும் இந்த கருத்துக்கணிப்பின் படி அடுத்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறும் என எதிர்ப்பார்க்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.69 சதவிகித மக்கள் அடுத்த தேர்தலுக்கு முன் ட்ரூடோ பதவி விலக வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். நவம்பர் 14 மற்றும் 17 க்கு இடையில் நடத்தப்பட்ட இதேபோன்ற கருத்துக் கணிப்பில் 72 சதவீத மக்கள் தலைவர் பதவி விலக வேண்டும் என விரும்புவதாகக் கூறியுள்ளனர்.

மேலும் ஆய்வமைப்பான ஜிளழள நிறுவனம், ட்ரூடோவை ஆதரிக்காதவர்களுக்கு மட்டுமே இந்த உணர்வு மட்டுப்படுத்தப்படவில்லை கடந்த கால தாராளவாத வாக்காளர்கள் கூட மாற்றத்தின் தேவையை காரணம் காட்டி, அவரது நேரம் வந்து விட்டது என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர். அவரது பதவி விலகலிற்கு வலுவான உணர்வு இருந்தபோதிலும் - கிட்டத்தட்ட 10 கனடியர்களில் ஏழு பேர், பதிலளித்தவர்களில் 63 சதவீதம் பேர் ட்ரூடோ பதவி விலகுவது



சாத்தியமில்லை என்று நம்புகிறார்கள். என குறிப்பிட்டிருந்தது.

மேலும் யார் அடுத்த பிரதமராக வரவேண்டும் என்றும் மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதன்படி துணை பிரதமரான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், கேபினட் அமைச்சர்களான மெலனி ஜாய், ஃப்ராங்கோயிஸ் ஃபிலிப் ஷாம்பேன், இந்திய வம்சாவளியினரான அனிதா ஆனந்த், மார்க் கார்னீ ஆகியோரின் பெயர்கள் அதிகமாக கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ட்ரூடோ தனது நெருங்கிய ஆலோசகர்களிடம் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

ரொரன்டோ, டிசெ.30

முக்கியமான நகரங்கள் பலவற்றில் வீடற்றவர்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வீடற்றவர்கள் தற்காலிக முகாம்கள் அல்லது கூடாரங்களில் தங்கி இருப்பதாகவும் இவர்கள் பல்வேறு விபத்துக்களை சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் தீ விபத்து சம்பவங்கள் பதிவாகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் நிலவி வரும் கடும் குளிரான காலநிலையின் மத்தியில் இந்த பிரச்சனை அதிகரித்துள்ளது.

உரிய கட்டமைப்பை கொண்டிராத கூடாரங்கள் மற்றும் முகாம்களில் குளிரை கட்டுப்படுத்துவதற்காக மூட்டப்படும் தீ, விபத்துக்களாக மாறி விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா முழுவதும் சுமார் மூன்று லட்சம் பேர் வீடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவில் விமான விபத்தில் உயிர் பிழைத்த பயணிகள்



ரொரன்டோ, டிசெ.30

கனடாவில் விமான விபத்தில் சிக்கிய பயணிகள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளனர்.

கனடாவின் வடமேற்குப் பிராந்தியத்தின் யெலோனைப் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எயார் டின்டி விமான சேவைக்கு சொந்தமான சிறிய ரக பயணிகள் விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விமானம் விபத்துக்குள்ளானதில் சிலர் காயமடைந்திருந்தனர் என மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டியாவிக் பிராந்தியத்தின் வைரச் சுரங்கமொன்றிற்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விமானத்தில் இரண்டு விமானிகள் மற்றும் எட்டு பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த அதிகாரிகள் உடன் செயற்பட்டு, விபத்தில் சிக்கியவர்களை மீட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர்களுக்கு உயிராபத்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தை தரையிறக்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இவ்வாறு விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவிலுள்ள இந்துக்கோவில் தலைவரின் மகனின் வீட்டில் தாக்குதல்

ரொரன்டோ, டிசெ.30

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் சர்ரே பகுதியில் வசித்து வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரபல தொழிலதிபர் சதீஷ் குமார் இலட்சுமி நாராயண் கோவில் தலைவராக உள்ளார்.

இந்தநிலையில் சதீஷ் குமாரின் மூத்த மகன் வீட்டில் மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினார்கள்.

அவர்கள் 14 ரவுண்டுகள் சுட்டனர். இதில் இந்த கோவில் நிர்வாகியின் மகன் வீடு சேதடைந்தது.

அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

தகவல் அறிந்ததும் போலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். அப்பகுதியில் கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் யார் என்பது குறித்து தீவிரவாத விசாரணை நடந்து வருகிறது.

கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத ஆதரவாளர்கள், இந்து கோவில்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

சர்ரேரில் உள்ள லட்சுமி நாராயண் கோவில் மீது மூன்று முறை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்நிலையில்தான் கோவில் நிர்வாகியின் மகன் வீடு மீது துப்பாக்கி சூடு நடந்துள்ளது.

இதனால் காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி இருக்கலாம் என்று போலிஸார் சந்தேகிக்கிறார்கள். இது தொடர்பாக சதீஷ் குமார் கூறும்போது, "எனது மகன் வீடு மீது தாக்குதல் நடந்துள்ளது. போலிஸ் விசாரணையின் போது தாக்குதல் நடத்தியது யார் என்பது தெரிய வரும் என்றார்.

அதிகரிக்கும் வன்முறை சம்பவங்கள்: காவல்துறையினர் விடுத்துள்ள எச்சரிக்கை!

ரொரன்டோ, டிசெ. 30

இளைஞர்கள் மத்தியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக காவல்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக காவல்துறையினர் தெரிவிக்கையில்,

"கடும்போக்குவாத வன்முறைகளும், இணையம் ஊடான வெறுப்புணர்வு வன்முறைகளும் தற்போது இளைஞர்களிடையே அதிகரித்துள்ளது.

இளம் தலைமுறையினா அடிப்படைவாத கோட்பாடுகள் குறித்து நாட்டம் காட்டுவது ஆபத்தான ஒன்றாகும்." என குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், தீவிரவாத சம்பவங்கள் தொடர்பில் இரண்டு இளைஞர்களை காவல்துறையினரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர், கைது செய்யப்பட்ட இருவரும் யூத இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், ஐந்து மாத காலப் பகுதியில் தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களில் ஐந்து கனடிய இளைஞர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

எனவே, இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என யூத மதத் தலைவர்கள் இளைஞர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயமானது

பணி முடித்து திரும்பும் நியூசிலாந்து தூதர் சம்பந்தனை நேரில் சந்தித்துக் கூறினார்

கொழும்பு, டிசெம்பர் 30

"இலங்கையில் அமைதி ஏற்பட - மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும். இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும்."

- இவ்வாறு இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்து பேசினார்.

இதன்போதே நியூசிலாந்து தூதுவர் மேற்கண்டவாறு கூறினார் என்று சம்பந்தன் எம். பி. தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து விரைவில் விடை பெறவுள்ள நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் இன்று (நேற்று) காலை என்னைச் சந்தித்தார். இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம்.

அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம். இலங்கையில் அமைதியையும் நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ. நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன். வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் எதிர் நோக்கும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் தெளிவுபடுத்தினேன்.

எனது கருத்துக்களை நியூசிலாந்து தூதுவர் ஏற்றுக் கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ் நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர் அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார். இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்குத் தான் நேரில் விஜயம் செய்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் என்னிடம் கூறினார். இலங்கைக்கும், இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்."

- என்று சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டார்.



வடமராட்சி கிழக்கில் ஒதுங்கியது தெப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் வெளிநாட்டிலிருந்து அடித்து வரப்பட்ட மிதக்கும் அமைப்பொன்று கரையொதுங்கியுள்ளது.

மத வழிபாட்டு அமைப்பொன்றே கரையொதுங்கியுள்ளது. தென்கிழக்காசிய நாடொன்றிலிருந்து இந்த மிதக்கும் வடமராட்சி கிழக்கில் ஒதுங்கியது தெப்பம் அமைப்பு அடித்து வரப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

அந்த அமைப்பை பார்க்கும் போது, தாய்லாந்தின் பௌத்த வழிபாட்டு அமைப்பை போலிருப்பதாகவும் கௌதம புத்தரின் வழிபாட்டு அமைப்பு கரையொதுங்கிய சம்பவமென அங்கு விகாரை கட்டும் முஸ்தீபு ஆரம்பிக்கலாமென்றும் பிரதேசவாசிகள் நகைச்சுவையாக பேசிக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

பொது வேட்பாளராக போட்டியிட நான் தயார்

தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தானும் பொது வேட்பாளராக போட்டியிட தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடதுசாரி கட்சிகளுக்கு வேட்பாளர் ஒருவர் இல்லை என்பதுடன் அவர்கள் கைவிடப்பட்ட நிலைமையில் உள்ளனர். சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, பொதுஜன பெரமுனவின் ஒரு அணி ஆகிய தரப்புக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை.

இதனால், இந்த அணிகளின் விருப்பம் மற்றும் இணக்கத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன வேட்பாளராக போட்டியிட தயார். 1950ஆம் ஆண்டுகளை சேர்ந்தவர்களே தற்போது நாட்டை ஆட்சி செய்கின்றனர். அவர்களுக்கு தற்போதைய இளைய தலைமுறையின் எண்ணங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றிய எந்த புரிதலும் இல்லை-என்றார்.

நாடளாவிய ரீதியில் மின் தடை; தவறை ஏற்றது மின்சார சபை

கொழும்பு, டிசெ. 30

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மின்சார விநியோகத்தடை தொடர்பில் இலங்கை மின்சார சபை தவறை ஏற்றுக்கொண்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாதாந்த சபை அமர்வில் இந்த விடயம் தொடர்பில் கருத்துரைக்கையிலே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் எம். ஏ.ஆர்.எம் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கடந்த 9 ஆம் திகதி மின் விநியோகத் தடை ஏற்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், மின்சார பாவனையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்வது தொடர்பில் எதிர்வரும் ஆணைக்குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

ஒரு வருட காலமாக வேதனம் இன்றி பணியாற்றும் 350 இலங்கையர்கள்!

கொழும்பு, டிசெ. 30

வெவ்வேறு மாகாணங்களில் இருந்து ஜோர்தானின் சஹப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலுக்கு

சென்ற சுமார் 350 இலங்கையர்கள் ஒரு வருட காலமாக வேதனம் இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக தங்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த தரப்பினர் சுமார் 6 வருடங்களாக அங்கு பணியாற்றி வந்துள்ளனர்.

எனினும், தற்போது குறித்த ஆடை தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் உணவு மற்றும் தங்குமிட வசதியின்றி தாங்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அங்குள்ள இலங்கையர்கள் சிலர் தெரிவித்தனர்.

செங்கடலில் கப்பல்களின் கட்டணம் அதிகரிப்பு; இலங்கை ஏற்றுமதியாளர்களும் கடும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 30

மத்திய கிழக்கின் செங்கடல் பிராந்தியத்தில் யேமனின் ஹவுதி போராளிகளின் தாக்குதல்கள் காரணமாக அந்த கடல் வழியாக பயணிக்கும் வணிக கப்பல்கள் தமது கட்டணங்களை 300 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் இது இலங்கையின் ஏற்றுமதியாளர்களை கடுமையாக பாதிக்கக் கூடும் எனவும் ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலவும் நிலைமையின் அடிப்படையில் இலங்கையில் இருந்து செங்கடல் வழியாக ஏற்றுமதி செய்யப்படும் 20 அடி கொள்கலன் பெட்டிகளுக்கு தற்போது அறவிடப்படும் 600 அமெரிக்க டொலர்கள் ஆயிரத்து 500 டொலர்களாக அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

யேமனில் இயங்கி வரும் ஹவுதி போராளிகள் இஸ்ரேலை இலக்கு வைத்து செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதே இந்த நிலைமைக்கு காரணம்.

இந்த நிலையில், ஹவுதி போராளிகள் அண்மையில் வணிக கப்பல் ஒன்றை தமது கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

இதன் காரணமாக சில கப்பல் நிறுவனங்கள் செங்கடல் வழியாக பயணிப்பதற்கு பதிலாக மாற்று வழியில் பயணம் செய்வது குறித்து கவனம் செலுத்தியுள்ளன.

செங்கடலில் பெம் எல். மென்டேப் பகுதிக்கு அருகில் நடக்கும் இந்த தாக்குதல்கள் காரணமாக கப்பல்களில் பொருட்களை கொண்டு செல்லும் 20 அடி கொள்கலன் பெட்டிகளுக்கான கட்டம் இந்த மாதம் ஆயிரத்து 500 டொலர்களாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

செங்கடலுக்கு பதிலாக மாற்று வழியில் கப்பல்கள் பயணித்தால் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு மேலும் அதிகளவான கட்டணங்களை செலுத்த நேரிடும் எனவும் ஏற்றுமதியாளர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடார் ரணில்!

கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 16 மற்றும் ஒக்ரோபர் 16 ஆம் திகதிகளுக்கு இடையில் நடைபெறும், ஆனால் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக களமிறங்கமாட்டார்.

இதற்கு முன்னர் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியை சந்தித்த அவர் 2016 இல், மற்றொரு இழப்பை எதிர்பார்த்து, பொது வேட்பாளரை பரிந்துரைத்தார். அந்த வெற்றியில் ஆட்சியைப் பிடித்தார்.

எவ்வாறாயினும் இந்த முறை அவர் அதிஷ்டத்தால் மட்டுமே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். பொதுஜன பெரமுன ஒருபோதும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்காது.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்க பெரேரா தெரிவு செய்யப்பட்ட நிலையில், ரணில் விக்கிரமசிங்க விற்கு எந்த கட்சியுடன் கீழ் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட முயற்சித்தாலும் நிச்சயம் தோல்வியை சந்திக்க நேரிடும். நாட்டின் தற்போதைய நிலை மையைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் ரணில் விக்கிர மசிங்க போன்ற வயதான அரசியல்வாதிகளுக்கு வாக் களிக்க மாட்டார்கள். 65 வய திற்குட்பட்ட புதிய ஜனாதி பதியை நாடு தெரிவு செய்யும்.

வாழ்க்கைச் செலவினங் களில் குறிப்பிடத்தக்க அதி கரிப்புடன் பொதுமக்கள் போராடி வருகின்றனர். ஆண் டின் தொடக்கத்தில் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடு



வார்கள் என எதிர்பார்க்கின் றோம்.

மக்கள் இதைச் செய்யும் போது அதிகாரத்தில் இருப்ப வர்கள் சட்டவிரோத உத்தரவு களை வழங்குவார்கள்.

ஆனால் அவற்றைச் செயல் படுத்த கூடாது. தற்போதைய ஜனாதிபதி ஓய்வு பெறும்போது பாதுகாப்பாக இருப்பார், அதே நேரத்தில் உத்தரவை நிறைவேற் றியவர்கள் சட்டரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும்-என்றார்.

அரச ஊழியர்களுக்கு விசேட விடுமுறைகள்

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் நிலவிய மோச மான காலநிலை காரணமாக பணிக்கு சமூகமளிக்க முடியாத அரச ஊழியர்களின் வேலை நாட்களை விசேட விடுமுறை தினங்களாக பதிவு செய்ய பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர், ஒக் ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பணிக்கு சமூகமளிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு மட்டுமே இந்த சலுகை செல்லுபடியாகும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் விசேட விடுமுறைகள், விடுப் புப் பதிவேட்டில் முறையாகப் பதியப்படவேண்டும் என அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட விடுமுறை யைப் பெற்றுக்கொள்வதற்கு கடமைக்கு சமூகமளிக்க முடியாததற்கான காரணத்தைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலரின் கையொப் பத்துடன் திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன் பின்னர், திணைக்கள தலைவர் கடிதத்தை சரி பார்த்து, அவற்றினை விசாரித்த பின்னரே இந்த விசேட விடு முறை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு 10 கேள்விகள்!

பொதுஜன பெரமுன தயாரித்துள்ளது

கொழும்பு, டிசெ. 30

பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு கட்சி பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த பத்து கேள்விகள் அடங்கிய கேள்விக்கொத்தினை தயாரித்துள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுஜன பெரமுன முன் வைத்துள்ள நிபந்தனைகளை கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என குறிப்பிட்டுள்ள அந்த ஊடகம், இதுவரை தம்மிக்க பெரேரா குறித்த ஊகங்களே வெளியாகியுள்ளன. எனினும் வேறு சில வேட்பாளர்கள் குறித்து ஆராய்வதாக கட்சியின் பொதுச்செயலாளர் கடந்த வாரம் தெரிவித்துள்ளார் எனவும் செய்தி வெளியிட்டுள்ளது.

பத்து கேள்விகளுக்கான பதில்களை அடிப்படையாக வைத்து வேட்பாளரை கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய் வார் என தெரிவித்துள்ள அந்த ஊடகம், இந்த பத்து நிபந்தனைகள் அல்லது கேள்விகள் அரசியல் கூட்டணிகளை உருவாக்குவதற்கான அவர்களின் திறன் மற்றும் தேர்தலில் அதிக ஆதரவை பெறுவதற்கான திறன் குறித்ததாகவும் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

வற் வரியை குறைப்பதற்கான திட்டங்கள் அரசாங்கத்தின் வரு மானத்தினை அதிகரிப்பதற்கான மாற்று திட்டங்கள், 7 வீத பொரு ளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், நல்லாட்சிக்கான திட்டங்கள் குறித்த கேள்விகளையும் பொதுஜன பெரமுன தயாரித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்த வேண்டாம்!

சுகாதாரத்துறையினர் மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் தற்போது வேகமாக பரவிவரும் வைரஸ் தொற்றுக்களுக்கு, வைத்திய ஆலோ சனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பயன் படுத்த வேண்டாம் என சுகாதாரத்துறையினர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலைக் காரணமாக பல பிரதேசங்களில் தற்போது இன்புளுவன்சா உள்ளிட்ட வைரஸ் தொற்றுக்கள் வேகமாக பரவிவருகின்றன.

இந்த நிலையில், வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பயன்படுத்த வேண் டாம் என சுகாதாரத் துறையினர் பொது மக்களி டம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளி யிட்ட கொழும்பு தெற்கு போதனா வைத் தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மதுகொட, நீண்ட நாட்களாக காய்ச்சல் நிலவுமாயின் உடனடியாக அரச வைத்திய சாலைக்கு சென்று வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

அவ்வாறான வைரஸ் தொற்றுகள் காற்றின் மூலம் வேகமாகப் பரவுவதால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



மேலும், நோயிலிருந்து தங்களைப் பாதுகாத் துக் கொள்வதற்காக முகக்கவசத்தை அணியு மாறும் விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மது கொட தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவி உயிரிழப்பு; அறிக்கை கோரும் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்.பல்கலைக்கழக மாணவியின் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவி, மருந்தின் ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ள நிலையில், அவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக, மாணவியின் உறவினர் களால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டில் அந்த மாணவிக்கு எவ்விதமான ஒவ்வாமையும் இல்லை எனவும் செலுத்தப்பட்ட ஊசி மருந்து என்னவென்பது தமக்கு தெரிவிக்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யிருந்த நிலையிலேயே குறித்த மாணவியின் மரண அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐஸ் பாவித்து விட்டு கடமையாற்றிய பொலிஸ்காரர் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 30

ஐஸ் போதைப்பொருள் பாவித்துவிட்டு கடமையாற் றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சேவையை இடை நிறுத்த புத்தளம் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பல்லம பொலிஸ் நிலையத் தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி நண்பகல் 12.00 மணியள வில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின்

அசாதாரண நடத்தை காரணமாக பல்லம பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை வரவழைத்து வைத்தியசாலை யின் சட்ட வைத்திய அதிகாரி யிடம் அனுப்பி வைத்தனர்.

சட்ட வைத்திய அதிகாரி யின் அறிக்கை கிடைக்கப் பெறும் வரை குறித்த உத்தி யோகத்தரை முந்தல் பொலிஸ் நிலையத்துக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்வதற்கும் புத்தளம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏற்பாடு செய்தார்.

புத்தளம் சட்ட வைத்திய அதிகாரி கடந்த 24ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில், தான் பரிசோதித்த பொலிஸ் உத்தியோகத்தரின் இரத்தத்தில் மெத்தம் பெட்டமைன் அல்லது ஐஸ்போதைப்பொருள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த அறிக்கையை ஆய்வு செய்த புத்தளம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர், கடமையின் போது போதைப்பொருள் பாவித்த குற் றச்சாட்டின் கீழ் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளின் சேவையை கடந்த 26 ஆம் திகதி முதல் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம்களின் மத உரிமை பறிக்கப்பட்ட நிகாப் எதிர்ப்பு

பொதுபலசேனாவும் முஸ்லிம் எதிர்ப்பும்



முஸ்லிம் பெண்கள் அணியும் நிகாப் மற்றும் புர்கா எனும் முகத்திரை இன்று சர்ச்சைக்குள்ளாக்கப் பட்டுள்ளது. நாட்டில் அவசரகால சட்டம் அமுலில் இருந்த காலத்தில் அச்சட்டத்தின் கீழேயே நிகாப் மற்றும் புர்காவுக்கு தடைவிதிக்கப் பட்டிருந்தது. அவசரகால சட்டம் நீக்கப்பட்டதும் நிகாப் மற்றும் புர்காவுக்கான தடையும் நீங்கியுள்ளது என பொலிஸ் திணைக் களம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு செய்தும் பொதுஇடங்களில், பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் முஸ்லிம் பெண்கள் முகத்திரை அணிய இயலாத சூழலே காணப்படுகிறது.

ஊவா மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன, அவரது அதிகாரத்தின் கீழ் இருக்கும் மாகாணத்தில் நிகாப் மற்றும் புர்காவுக்கு தடை விதித்துள்ளமை முஸ் லிம் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி யிருக்கிறது. நாட்டின் நாட்டு மக்களின் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும் பொலிஸ் திணைக்களம் நிகாப் மற்றும் புர்காவுக்கான தடை நீங்கியுள்ள தென உத்தியோகபூர்வமாக அறிவித் திருக்கின்ற நிலையில் மாகாண ஆளுநர் ஒருவரால் பாதுகாப்புக்குப் பொறுப் பான பிரிவினரால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலை மீறமுடியுமா? என்பது சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

நிகாப், புர்காவுக்குத் தடை

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முஸ்லிம் அடிப்படைவாதக் குழுவொன் றினால் மேற்கொள்ளப்பட்ட தற் கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நாட்டின் ஏனைய இன மக்கள் மத்தியில் முஸ்லிம் பெண்கள் அணியும் முகத் திரைக்கு பலத்த எதிர்ப்பினை நாடெங் கும் ஏற்படுத்தின. தற்கொலை குண்டுத் தாக்குதல்களுக்கு முன்பு பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த இனவாதக் குழுக் களே முகத்திரைக்கு எதிர்ப்பு வெளி யிட்டு வந்தன. ஆனால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்பு நாடு தழுவிய ரீதியில் ஏனைய சமூகங்கள் அனைத்தும் எதிர்ப்பினை வெளியிட் டன. முகத்திரை அணியும் பெண்களை தீவிரவாதிகளாக அடையாளம் காட் டின.

இந்நிலையிலே நாட்டினதும், நாட்டு மக்களினதும் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகிக்கும் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம் பெண்கள் அணியும் முகத்திரைக்கு தடைவிதித்து விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டார். ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள் ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களையடுத்து மறுதினம் ஏப்ரல் 22 ஆம் திகதி இரவு முதல் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது சரத்தில் ஜனாதி பதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத் திற்கு அமையவே அவசரகால சட்டம் அமுலாக்கம் தொடர்பான விஷேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்திற்கு பாராளுமன்றம் ஏப்ரல் 24 ஆம் திகதி அனுமதி வழங்கியதுடன் அன்று முதல் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி அவசரகால சட்டத்தை ஜனா திபதி நீடித்து வந்தார். இந்நிலையிலே அவசரகால சட்டத்தின் கீழ் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு முகத் திரை அணிவதற்குத் தடை விதிக்கப்பட் டது?

அவசரகால சட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் நீக்கப்பட் டுள்ளது. எனினும் நாட்டின் பாது காப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொலிஸ ாருக்கு ஒத்துழைப்புகளை வழங்க இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 12 ஆவது சரத்திற்கு அமைய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே அவர் இராணுவத்தை ஈடுபடுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

முகத்திரைக்கான தடை நீக்கம்

கடந்த ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் அவசரகால சட்டத்தின் நீக்கத்து டன் முஸ்லிம் பெண்களின் முகத்திரைக் கான தடையும் நீங்கியிருந்தது. என்றா லும் விசேட வர்த்தமானி மூலம் தடை செய்யப்பட்ட முஸ்லிம் பெண்கள் அணி யும் ஆடையின் தடையும் நீங்கியுள்ளதா? என்பது தொடர்பில் முஸ்லிம் சமூகம் தெளிவற்று இருந்தது. இந்நிலையில் இது தொடர்பில் தெளிவுகளை, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் பொலிஸ்மா அதிபரிடம் கோரி, கடிதமொன்றினை அனுப்பியிருந்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் விளக்கம்

முகத்திரை தடை நீக்கம் தொடர்பாக முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச்.ஏ.ஹலீம் பொலிஸ்மா அதிபருக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கடிதமொன்றினை அனுப்பி வைத்திருந் தார். அமைச்சரின் கடிதத்துக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன கடந்த 7 ஆம் திகதி பதில் வழங்கி யிருந்தார். பதில் கடிதத்தில் முகத்திரைக் கான தடை நீக்கம் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நிகாப், புர்கா மற்றும் முகத்திரை தடை அவசரகால சட்ட விதிகளின் கீழேயே அமுலில் இருந்தது. அவசரகால சட்டம் அமுலில் இல்லாததால் நிகாப், புர்கா மற்றும் முகத்திரை தடைக்கான சட்டமும் அமுலில் இல்லை என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீமுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

இந்நிலையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உட்பட முஸ்லிம் அரசியல்வாதிகள் முகத்திரைக் கான தடைச்சட்டம் நீங்கினாலும் முஸ்லிம் பெண்கள் முகத்திரை அணி வதில் அவதானமாக நடந்து கொள்ளும் படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

நாட்டில் அவசரகால சட்டம் நீக்கப் பட்டதன் பின்பு அவசரகால சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பெண்கள் அணியும் முகத்திரைக்கான தடையும் நீங்கியுள்ளது என பொலிஸ் திணைக் களம் தெளிவுபடுத்தியிருந்தாலும் முஸ் லிம் பெண்கள் தற்போதைய சூழ்நிலை யில் பொது இடங்களில் முகத்திரை அணிவதால் ஏற்படக்கூடிய அசாதாரண நிலைமைகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இது விடயத்தில் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

முகத்திரைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை அவசரகால சட்டத்தின் நீக்கத் துடன் நீங்கியிருந்தாலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாசபை ஏற்கனவே மக்களுக்கு வழங்கியிருந்த வழிகாட்டல்களையே தொடர்ந்தும் பின்பற்றுமாறு கோரிக்கை விடுத்துள் ளது.

இம்மாதம் 1 ஆம் திகதி உலமாசபை அறிக்கையொன்றினை வெளியிட்டிருந் தது. அந்த அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது.

ஆடையைத் தெரிவு செய்து அணி வது ஒவ்வொரு மனிதனினதும், பெண் ணினதும் அடிப்படை மனித உரிமை யாகும். இலங்கையின் அரசியல் யாப்பிலும் இது பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்பு நாட்டில் ஓர் அசாதாரண நிலைமை உருவானது. இந்நிலையிலே அரசாங்கம் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியது. அவசரகால சட்டத்தின் கீழ் நிகாபும் தற்காலிகமாகத் தடைக்குள்ளானது. அமுல்படுத்தப்பட்டிருந்த அவசரகால சட்டம் கடந்த ஆகஸ்ட் 23 ஆம் திகதி நீக்கப்பட்டது. அத்தோடு விஷேட அரசாங்க வர்த்தமானியொன்றும் வெளி யிடப்பட்டது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பாதுகாப்புப் படையினரைக் கடமையில் ஈடுபடுத்தும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களையடுத்து ஏற்பட்ட அச்ச உணர்வுகளிலிருந்து மக்கள் இன்னும் முழுமையாக மீளவில்லை. இவ்வாறான தற்போதைய நிலையில் முஸ்லிம் பெண்கள் பகிரங்க இடங்களில் முகத்திரை அணிந்தால் அசாதாரண நிலைமைகள் உருவாகலாம். எனவே ஸ்திரமற்ற இன்றைய அரசியல் சூழலில் இனவாதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காத வகையில் நாம் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம்

அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச்.ஏ.ஹலீமும் முஸ்லிம் பெண்கள் முகத்திரையணிந்து பொது இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டியுள்ளார். மேலும் அவர் 'கடந்த ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் நாட்டில் அவசரகால சட்டம் நீக்கப்பட்டுள்ளது. அத்தோடு நாட்டினதும், மக்களினதும் பாதுகாப் புக்கான அனைத்து நடவடிக்கைகளை யும் மேற்கொள்ளும் அதிகாரம் பாது காப்பு தரப்பினருக்கு வழங்கப்பட்டுள் ளது. அதற்கான விசேட அரசாங்க வர்த்தமானியையும் ஜனாதிபதி வெளி யிட்டுள்ளார். தற்போது முகத்திரைக் கான தடையும் நீங்கியுள்ளது. எனினும் நமது சூழலிலுள்ள பெரும்பான்மை சகோதரர்களின் மனோபாவமும், அச்சமும் இன்னும் மாறியதாகத் தெரியவில்லை. இந்நிலையில் முஸ்லிம் பெண்கள் முகத்திரையணிந்து வெளியில் செல்லும்போது அசௌகரியங்களுக்கு ஆளாக இடமுண்டு. எனவே முகத்திரை யணிந்து பொது இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், காலநேர சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

பாதுகாப்புத் தரப்பினரின் சோதனை நடவடிக்கைகளின் போது பூரண ஒத்துழைப்பினை வழமைபோல் வழங்கு மாறும் வேண்டுகிறோம். உலமாக்களின் வழிகாட்டல்களின்படி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு நல்கி எமது உரிமைகளை எதிர்காலத்தில் உறுதி செய்ய முன்வருமாறும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான வாசுதேவ நாணயக்காரவும் முஸ்லிம் பெண்கள் பொது இடங்களில் நிகாப் மற்றும் புர்கா அணிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கோரியுள்ளார்.

'அவசரகால சட்டம் நீக்கப்பட்டதன் மூலம் நிகாப், புர்கா அணிவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டதாகத் தெரிவிக்க முடி யாது. இதனை சட்டத்தால் தடுப்பதற் குத் தேவையில்லை. மாறாக இதனை பொது இடங்களில் தவிர்த்துக் கொள் ளுமாறே அணிபவர்களிடம் தாழ்மை யுடன் வேண்டிக் கொள்கிறேன்.

நிகாப் மற்றும் புர்கா தடையை நீக்கு வதன் மூலம் ஆண், பெண் அடையா ளத்தை அறிந்துகொள்ள முடியாத நிலையே ஏற்படும். இது பாரிய பிரச்



சினையாகும். பாதையில் நாம் பயணிக்கும் போது பாதுகாப்பாக செல்ல வேண்டும். அத்தோடு எதிரே வரக்கூடியவர் ஆணா அல்லது பெண்ணா என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

அத்தோடு அனைத்து இடங்களிலும் ஆண், பெண்களின் முகம் வெளிப் படையாக இருக்க வேண்டும். தங்களது சொந்த இடங்களில், வீடுகளில் முகத் திரை அணிவதை நாம் எதிர்க்கவில்லை. அது அவர்களின் விருப்பமாகும். ஆனால் பொது இடங்களில் முகத்திரை அணிய வேண்டாம் என நாம் வினயமாக கேட்டுக் கொள்கிறோம். இதனை சட்டத்தின் மூலம் செய்ய வேண்டிய தில்லை.

அவசரகால சட்டம் நீக்கப்பட்டதன் பின்பு முகத்திரைக்கான தடை நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கை மூலம் அறிகிறேன். ஆனால் இந்தச் சட்டம் அவசரகால சட்டத்தின் கீழ் வருவதல்ல. இது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதில் இருக்கும் பிரச்சினையாகும். ஒருவர் ஒரு தவறை செய்திருந்தால் அந்த தவறை யார் செய்தார் என்பதை அடையாளப்படுத் திக் கொள்ள வேண்டும். அவ்வாறு அடையாளப்படுத்தும் பிரச்சினையிலே இந்த நிகாப் பிரச்சினை பார்க்கப்படு கிறது. மாறாக அவசரகால சட்டத்திற் கும் அதற்கும் எந்த தொடர்பும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண முன்னாள் ஆளுநர்

நிகாப், புர்கா தொடர்பில் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியும் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவரது கருத்துக் களும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் கருத்துக்களை ஒத்தவையாகவே அமைந்துள்ளன.

'முஸ்லிம் சமூகம் கண்ணியமாக அரசுக்கு வழங்கிய சுய உறுதிமொழி யினைக் காப்பாற்றும் வகையில் செயற்பட வேண்டும். நிகாப் மற்றும் புர்கா என்பனவற்றைப் பொது இடங் களில் அணிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்' என அசாத் சாலி முஸ்லிம் சமூகத்தைக் கோரியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் பொது இடங்களில் நிகாப், புர்கா அணிவதைத் தவிர்க்குமாறு உலமா சபை ஏற்கனவே அறிவித்துள்ளது. நிகாப், புர்காவுக்கான தடை நீக்கப்பட்டுவிட்ட பின்பும் முன் னைய நிலைப்பாட்டிலே இருப்பதாக உலமாசபை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தல்களையடுத்து அவசரகால சட்டத்தின் கீழ் நிகாப், புர்கா தடை செய்யப்பட்டி ருந்தது. தற்போது தடை நீங்கியுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள் ளது. இந்நிலையில் நிகாப், புர்கா தடை நீக்கத்திற்கு பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளும் மற்றும் அமைச் சர்கள் போன்றோரும் எதிர்ப்புத் தெரி வித்துள்ளனர். ஊவா மாகாண ஆளு நரும் அம்மாகாணத்தில் முகத்திரைக்கு தடை விதித்துள்ளார்.

நிகாப், புர்காவை நிரந்தரமாக தடை செய்வதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டுவர முயன்றபோது அதனை எதிர்த்து நாம் தடுத்தோம். அப்போது நாம் சுயமாக செயற்பட்டு முகத்திரை அணிவதை தவிர்ப்பதாக அரசுக்கு வாக்குறுதியளித்தோம்.

ஆனால் மீண்டும் சிலர் பொது இடங்களில் முகத்திரை அணிய ஆரம்பித்துள்ளதால் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அதனால் பொது இடங்களில் முகத்திரை அணிவதைத் தவிர்த்து தனிப்பட்ட இடங்களில் அணியுமாறு சமூகத்தைக் கோருகிறோம். வீணான பிரச்சினைகள் உருவாகுவதைத் தவிர்க்க ஒத்துழைக்குமாறு வேண்டுகி றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் முகத்திரைக்குத் தடை

நாட்டில் சட்டங்கள் ஒவ்வொரு மாகாணத்திற்குமென தனித்தனியாக இயற்றப்படுவதில்லை. சட்டங்கள் முழு நாட்டுக்குமே அமுல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் நாட்டின் ஒன்பது மாகா ணங்களில் ஒன்றான ஊவா மாகாணத் தில் நாட்டின் சட்டத்தையும் மீறி முகத் திரைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடை நகைப்புக்குரியது என்று கூட சொல்லலாம்.

ஆளுநர் மைத்திரி குணரத்ன

'ஊவா மாகாணத்தினதும், மக்கள துன் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவ தற்காகவே முஸ்லிம் பெண்கள் அணியும் நிகாப் மற்றும் புர்காவுக்கான தடையை தொடர்ந்தும் அமுல்படுத் தியிருக்கிறேன். ஊவா மாகாணத்தில் நிகாப், புர்கா அணிந்து செல்பவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்படுவார்கள் என ஆளுநர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில், 'ஊவா மாகாணத்தில் நிகாப் மற்றும் புர்கா அணிந்து செல்பவர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி அவர்கள் அடிப்படைவாத குழுக்களைச் சேர்ந்த வர்களா இல்லையா? என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன்.

அவசரகால சட்டம் நீக்கப்பட்டதும் நிகாப் மற்றும் புர்காவுக்கான தடை நீங்கியிருந்தாலும் அத்தடை ஊவா மாகாணத்தில் அமுலில் இருக்கும். இப்பகுதி மக்களின் பாதுகாப்பு கருதியே இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளேன்.

முஸ்லிம்கள் 600 வருடங்களுக்கும் மேலாக எமது கலாசாரத்துடன் ஒன்றி ணைந்து வாழ்கிறார்கள். இந்நிலையில் அண்மைக் காலமாக நிகாபும் புர்காவும் சம்பிரதாய முஸ்லிம்களின் கலாசாரத் தைப் பாதித்துள்ளன.

பெண்கள் நிகாப் மற்றும் புர்கா தொடர்ந்தும் அணிவார்கள் என்றால் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத குழுவுடன் தொடர்புபட்ட தீவிரவாதிகள் இன்னும் இருக்கிறார்கள் என்பதே அர்த்தமாகும். ஏப்ரல் 21 சம்பவத்துடன் எமது முஸ்லிம் சமூகம் தொடர்புபடவில்லை என்றே நாம் கருதுகிறோம். ஏப்ரல் தாக்குதல் களின் பின்பு தற்போது நிலைமை கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள் ளது என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. தாக்குதலில் 250 க்கும் மேற் பட்ட அப்பாவிகள் பலியாகியிருக்கிறார் கள். இந்நிலைமையை இந்நாட்டில் மீண்டும் அனுமதிக்க முடியாது.

இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு மிகவும் சவாலாக அமைந்திருந்த காலத்தில் ஞானசார தேரருக்கு எதிராக குரல் கொடுத்தவன் நான். நான் ஒரு இனவா தியோ தீவிரவாதியோ அல்ல. ஆனால் நான் முஸ்லிம், பௌத்தம், தமிழ் என எந்த தீவிரவாதம் என்றாலும் எதிர்ப்ப வன்.

நிகாப் மற்றும் புர்கா அணியப்படாத காலத்தில் எமக்குள் எந்தப் பிரச்சினை யும் உருவாகவில்லை. தீவிரவாதிகளின் செயற்பாட்டினாலே சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே வைராக்கியம் வளர்ந்து முரண்பாடுகள் உருவாகின. எனவே, தேசிய பாதுகாப்புக்கும், நாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ள நிகாப், புர்காவை ஊவா மாகாணத்தில் தடை செய்துள்ளேன்' எனத் தெரிவித் துள்ளார்.

அவ்வாறென்றால் ஊவா மாகாணத் தில் மாத்திரம் தான் தீவிரவாதிகள் இருக்கிறார்களா? ஆளுநர் மைத்திரி குணரத்னவின் கருத்து எம்மை இவ் வாறே நினைக்கச் செய்கிறது.

ஊவா மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்னவின் தன்னிச்சையான செயற் பாடுகள், அதுவும் ஓர் இனத்தை ஆடையை அடிப்படையாகக் கொண்டு தீவிரவாதிகளாக முத்திரை குத்த முனைந்திருப்பதை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கிறார் என்பது புதிராகவே இருக்கிறது. இது தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

முகத்திரை தடை நீக்கத்திற்கு எதிர்ப்பு

முகத்திரை அணிவதற்கான தடை நீக்கப்பட்டமைக்கு பலதரப்புகளிட மிருந்தும் எதிர்ப்புகளும் வெளியிடப் பட்டுள்ளன. அமைச்சர் சம்பிக்க ரண வக்க முகத்திரை அணியும் பெண்கள் அடிப்படைவாதிகள் என்று வர்ணித்துள் ளார். முகத்திரை அடிப்படைவாதிகளின் ஆடை எனவும் தெரிவித்துள்ளார். நாட்டில் தீவிரவாதத்தை அடியோடு களைந்தெறிய முகத்திரை அனுமதிக்கப் படக்கூடாது தடை செய்யப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்மஹிந்த அமரவீர

நிகாப் மற்றும் புர்காவுக்கான தடை நீக்கப்பட்டுள்ளமை நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு சவாலாக மாறியுள்ளது. நாட்டில் அடிப்படைவாதிகளின் செயற் பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையினாலே அண்மையில் நூற்றுக்கணக்கான உயிர்கள் காவு கொள் ளப்பட்டுள்ளன. அரசாங்கம் நிகாப், புர் காவை நிரந்தரமாகத் தடைசெய்வதற்கு சட்டம் இயற்ற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம

முஸ்லிம் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் நிகாப், புர்காவுக்கான தடை நீக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல்வாதிகளின் அழுத்தங் கள் காரணமாகவே இத்தடை நீக்கப்பட் டுள்ளது. நாட்டினதும், நாட்டு மக்களின தும் பாதுகாப்பு இது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படாமை ஆபத்தானதாகும். இத்தடை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனு கம தெரிவித்துள்ளார்.

நிரந்தர தடை ஏற்படுமா?

நிகாப் மற்றும் புர்கா அணிவதை நிரந்தரமாக தடைசெய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையை நாம் அறிவோம். கடந்த ஜூலை மாதம் 30ஆம் திகதி நீதி மற்றும் சிறைச்சாலை கள் அமைச்சர் தலதா அத்துகோரள முகத்திரை அணிவதை நிரந்தரமாக தடைசெய்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றினைத் தாக்கல் செய்திருந்தார். அமைச்சரவையில் பெரும்பான்மை அமைச்சர்கள் ஆதரவும் வழங்கியிருந்தார்கள். இது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கால அவகாசம் கோரியதையடுத்து அப்பத்திரம் பின்தள்ளப்பட்டது.

நிகாப் மற்றும் புர்கா ஆடைகளுக்கு முற்றாக தடை விதிக்காது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சந்தர்ப் பங்களில் மாத்திரம் அதனைத் தடை செய்யும் வகையில் சட்டமியற்றுவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக் களத்திடம் நீதியமைச்சர் ஆலோசனை கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிகாப், புர்காவை நிரந்தரமாக தடை செய்யாது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக தடை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முஸ் லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரத மரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

முகத்திரைக்கான தடை நாட்டில் தற்போது அமுலில் இல்லை. பொது இடங்களிலும் முகத்திரை அணிய முடி யும் என்றாலும் சட்டத்தை அமுல்படுத் துவதில் சிக்கல்கள் உருவாகியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

நடைமுறையில் முகத்திரை தடை நீக்கியதாகத் தெரியவில்லை.

பொது இடங்களில் முகத்திரை அணிந்து செல்லும் பெண்கள் சந்தேகம் கொண்டே நோக்கப்படுகின்றார்கள். இந்நிலைமை மாற்றம் பெறவேண்டும். இந்நிலைமையை சட்டத்தினால் மாத்திரம் மாற்றிவிட முடியாது.

முஸ்லிம் சமூகத்தில் இது பற்றி எழுந்துள்ள குழப்பங்கள் நீக்கப்பட்டு தெளிவுகள் வழங்கப்படவேண்டும்.

இதுவிடயத்தில் உலமா சபை நாட்டின் இன நல்லிணக்கம், முஸ்லிம் சமூகத்தில் பாதுகாப்பை முன்னிறுத்தி பகிரங்க தீர்மானத்தை உடன் அறிவிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் பாதிப்பு தொடர்ந்தும் நீடிப்பு!

கடன் பிடியில் 54 வீதமான குடும்பங்கள்



கொழும்பு, டிசெ. 30

கடந்த வருட பொருளாதார நெருக்கடி குடும்பங்களின் மீது தொடர்ந்தும் ஏற்படுத்தி வரும் பொருளாதார தாக்கம் குறித்த உத்தியோகபூர்வ ஆய்வுகள் வெளியாகியுள்ளன.

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்த ஆய்வினை முன்னெடுத்து அது குறித்து விவரங்களை பகிரங்கப்படுத்தி யுள்ளது.

இந்த ஆய்வு பொருளாதார நெருக்கடியால் கல்வித்துறை எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் வேலைவாய்ப்பு தனிநபர் வருமானத்தின் மீதான தாக்கம் குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவுகள் மீதான தாக்கம் - குடும்பங்கள் அவற்றை எவ்வாறு எதிர் கொள்கின்றன சுகாதாரத்தின் மீதான தாக்கம் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராய்ந் துள்ளது.

குடும்பங்களின் நிதி நிலை மைகளில் பொருளாதார நெருக்கடி கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை இந்த பொருளாதார ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

வருமானத்திலும் செலவுகளி லும் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளது எனதெரிவித்துள்ள ஆய்வு இந்த நெருக்கடி குடும்பங்கள் எவ்வாறு நிதியைகையாள் கின்றன என்பதில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள் ளது எனவும் தெரிவித்துள்ளது.

பல பொருளாதார கார ணங்களால் பல குடும்பங்களின் வருமானங்கள் குறைவடைந் துள்ளது இதன் காரணமாக அவர்கள் தங்களிடமுள்ள பணத்தை செலவிடும் முறையும் மாற்றமடைந்துள்ளது எனவும் சனத் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவீனங்களில் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது அதன் காரணமாக குடும்பங்கள் மூலோபாய மாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய நிலை யிலும் சவாலான தருணங்களில் தங்களின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கான வழி முறைகளை பின்பற்றவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன என ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 60 வீதமான குடும்பங்களின் வருமானம் குறைவடைந்துள்ளமை ஆய் வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் 54.9 வீதமான குடும்பங்கள் இன்னமும் கட னின் பிடியில் சிக்குண்டுள்ளன, இது இலங்கையின் குடும்பங் களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை ஏதாவதொரு நிதி கடப்பாட்டில் அல்லது வறுமையில் சிக் குண்டிருக்கின் றன என்பதும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட இடங்களில் கொள்ளை!

7 பேர் கைது; நகைகள் மீட்பு!!

யாழ்ப்பாணம், டிசெ. 28

வல்வெட்டித்துறையில் வசிக்கும் பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உள்ளிட்ட 7 பேர் பொலிஸாரால், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 16 பவுண் நகைகளும் மீட்கப்பட் டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு வல் வெட்டித்துறை பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பகுதியில் வசிக்கும் பொலிஸ் உத்தியோ கஸ்தர் ஒருவரின் வீட்டில் நடந்த திருட்டுச் சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் திருடப்பட்டுள்ளன.

அது தொடர்பில் பொலி



ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் திருட்டில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 19 வயதான- போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவரை பொலி ஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படை யில், நகை அடகு வைத்தவர், நகையை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக் களின் கீழ் பெண் உள்ளிட்ட ஏனையோர் கைது செய்யப்பட் டனர்.

கைது செய்யப்பட்ட நபர் களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த துள்ளனர்.

உயர்தர பரீட்சைக்கு முன் டெங்கு ஒழிப்புத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 30

கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சை நடைபெறும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வளாகங்களையும் சுத்தப்படுத்தும் விசேட வேலைத் திட்டம் தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித் துள்ளது.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடை வதாக அந்த சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன தெரிவித்தார்.

தற்போது தினசரி டெங்கு நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மழைப் பொழிவு கொஞ்சம் கொஞ்ச மாக குறைந்து வருகிறது. நுளம்பு வளர்ச்சிக்கு சாதகமான சூழல் உள்ளது. ஜனவரியில் உயர் தர பரீட்சை ஆரம்பமா கிறது. இதன்படி, தேசிய டெங்கு ஒழிப்பு திட்டத்தின் அறிவுறுத்தலின் படி, உயர் தரப் பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகளில் இந்த டெங்கு ஒழிப்பு திட்டம் துரிதமாக இடம்பெறும். இது டிசம்பர் 31 இற்குள் முடிக்கப்படும் என்று அவர் கூறினார்.

பாடசாலைகளில் திருட்டில் ஈடுபட்ட மாணவர்கள் கைது

கொழும்பு, டிசெ. 30

முந்தல் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளில் உபகரணங் களை சேதப்படுத்தி, சுமார் 8 இலட்சம் பெறுமதியான பணம் மற்றும் உபகரணங்களை திருடிய குற்றச்சாட்டின் கீழ் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட மாணவர்களால் திருடப்பட்ட தாக கூறப்படும் மடிக் கணினி, மைக், வைபை ரவுட்டர், புரஜெக்டர் உள்ளிட்ட உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முந்தல் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை உள்ளிட்ட இரண்டு ஆரம்ப பாடசாலைகளில் உபகரணங்களைச் சேதப்படுத்தி, உபகரணங்களையும் பணத்தையும் திருடியுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு இரண்டு தடவைகள் குறித்த பாடசாலைகளுக்குள் புகுந்து பணத்தை திருடிய மாணவர்கள், பணம் கிடைக்காதபோது அந்த பாடசாலைகளில் இருந்த உபகரணங்களை திருடிச் சென்றுள் ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரம் பெற்றுக்கொள்வதே என் எதிர்பார்ப்பு!

கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 30

அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்வதே தனது எதிர்பார்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

எதிர்க்கட்சிக்கு செல்வதோ அல்லது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைத்து வத்தை பெறுவதோ எமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் இரண்டாவது நாளாக ஆரம்பமான "கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பம்" கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பக் கல்விக் கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி கிரிந்திவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிரிந்தி வெல மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு கடந்த 25 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமை யில் ஆரம்பமானது.

அது 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளில் 50 க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் வர்த்தக கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

கேள்வி - அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு. கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர் களை நியமிப்பீர்களா?

பதில்- அப்படி எதுவும் இல்லை. தற்போது இருக்கின்ற அமைப்பாளர்களின் தவறில்லை. தேர்தலும் உண்டு.

கேள்வி- கட்சியில் இருந்து விலகியவர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன?

பதில்- கட்சியில் இருந்து விலகியவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படு வார்கள். அந்த விஷயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

கேள்வி- இந்நாட்களில் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் கைதுசெய்யப்படு கின்றனர்.

பதில்- இந்த அரசாங்கம் செய்த சிறந்த பணியாக நான் இதைக் கருதுகிறேன். போதைப் பொருளால் இந்த நாடு அழிந்து வருகிறது.

கேள்வி- எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நீங்கள் தயாராகி வருவதாகப் பேசப்படு கிறது. அது உண்மையா?

பதில்- இதுவரை அப்படி ஒரு கதை இல்லை. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது எங்கள் எதிர் பார்ப்பு. எதிர்க்கட்சிக்கு செல்லும் எதிர்பார்ப்பு எம் மிடம் இல்லை.

கேள்வி- எதிர்காலத்தில் வரி குறைக்கப்படுமா? அதிகரிக்கப் படுமா?

பதில்- வரிகளை நீக்க முடியாது, வரிகள் இருக்கும். அதாவது மக்களுக்கு நியாய மான வரி முறையை அறி முகப்படுத்த வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

அதேவேளை, ஜனவரி 9 ஆம் திகதி பாராளுமன்றம் கூடவுள்ளது. இதன்போது மொட்டு கட்சியின் எம்.பிக்கள் சிலர் எதிரணியில் அமரக்கூடும் என தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அம்பாறையில் போதைப்பொருளை விநியோகிக்கும் பிரதான நபர் கைது!

அம்பாறை, டிசெ. 30

அம்பாறை பிரதேசத்துக்கு போதைப்பொருள் விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

அம்பாறை நகருக்கு ஐஸ் கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரை எச்சரித்த கடற்தொழில் அமைச்சர்!



யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து கடத்தலுடன் யார் சம்பந்தப் பட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாரைக் கடுமையாக எச்சரித் தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்று போதைவஸ்து விடயம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப் பொருள் கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டை பொலிஸார் பரிசோதனையிடச் சென்றபோது சோதனையிட அனுமதி வழங்கப்படாமை தொடர் பில் கேள்வி எழுப்பிய அமைச்சர், அவ்வாறு நீங்கள் செயற்பட முடியாது. எவராக இருந்தாலும் நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் போதைவஸ்துடன் தொடர்புடையோர் யாருடைய செல்வாக்கையும் பயன்படுத்த முடியாது. யாராக இருந்தாலும் கட்டாயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் இந்த விடயத்தில் தவறிழைக்கக்கூடாது. குறிப்பாக என்னுடைய பெயரை பாவித்தால்கூட நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

புத்தாண்டில் ஐ.தே,கவுக்கு புதிய தலைமைத்துவ குழு

கொழும்பு, டிசெ. 30

புத்தாண்டில் கட்சியை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தலை மைத்துவ சபையொன்றை நியமிக்கவுள்ளதுடன், புதிய அமைப்புக்கு சில அதிகாரங்களை வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க எதிர்பார்த்துள்ளார்.

தலைமைத்துவச் சபையில் ருவான் விஜேவர்தன, ஹரீன் பெர் னாண்டோ, வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க, சாகல ரத் நாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் பாலிதரங்கே பண்டார ஆகியோர் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வருடத்தில் தலைமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட வுள்ளதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உறுதிப்படுத்தினார்.

நான், பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, வஜிர, சாகல, அகில, ரவி ஆகியோர் சபையில் இருப்போம். ஆனால் ஏனையவர் கள் தொடர்பில் உறுதியாக தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

வட பகுதிக்கான ரயில் சேவைகள் ஜனவரி 7 ஆம் திகதியுடன் நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 30

வடக்கு ரயில் மார்க்கத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஜனவரி 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே மஹவ தொடக்கம் அனுராதபுரம் வரையான வடக்கு ரயில் மார்க்கம் அன் றைய தினம் முதல் 06 மாத காலத்திற்கு மூடப்படும் என அதன் பிரதி முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே குறிப்பிட்டார்.

இந்த காலப்பகுதியில் கொழும்பில் இருந்து மஹவ மற்றும் அனுராதபுரத்திலிருந்து காங்கசன்துறை வரை மட்டுமே ரயில் சேவைகள் இடம்பெறும் எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிறிஸ்மஸ் பண்டிகை நீண்ட விடுமுறை யில் சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்காக விசேட போக்குவரத்து சேவை கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இந்த போக்குவரத்து சேவை கள் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என அதன் தலைவர் லலித் டி அல் விஸ் கூறினார்.

போயா நாளில் பொலிஸாருக்கு மதுபானம் விற்றவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 30

போயா தினத்தில் பொலி ஸாருக்கு பியர் விற்பனை செய்த ஒருவர் கையும் களவு மாக பிடிபட்ட சம்பவம் மானிப்பாய் பகுதியில் இடம் பெற்றது.

மானிப்பாய், ஆனைக்கோட் டைப் பகுதியில் உள்ள மது பான விற்பனை நிலையத் திலேயே நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகரின் கீழ் செயல்படும் யாழ்ப் பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை யடுத்து மாறுவேடத்தில் சென்ற பொலிஸாருக்கு பியர் விற்பனை செய்த போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட 36 வயதான சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

இந்தியா, அமெ. நிகழ்ச்சி நிரலில் இயங்கும் சுமந்திரன், சம்பந்தன்!

பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

"இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமையச் செயற் படும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் விரும்பும் அரசியல் தீர்வை வழங்க பொதுஜன பெரமுன ஒருபோதும் இணங் கவே மாட்டாது" என்று மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்தும் சந்திப்புக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் எல்லை மீறிப் பேசுகின்றனர். அரசமைப்பை மீறி எதனையும் செய்ய முடியாது என்பதை அரசியலில் முதிர்ச்சி பெற்ற அவர்கள் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக ஜனாதிபதியு டன் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் நடத்திய பேச்சின் போது வெறும் 4 தமிழ் எம். பிக்கள் மாத்திரம் கலந்து கொண்டுள்ளனர். அதில் பங் கேற்ற கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தன், ஜனாதிபதியை மிரட்டும் வகையில் பேசியுள் ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றும், இல்லையேல் தாம் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். அது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகும். சர்வதேசத்தை நம்பி ஏமாறாதீர்கள் என்று சம்பந்தன், சுமந்திரனிடம் சொல்லி வைக்கின்றேன்- என்றார்.

எம்.பிக்களில் பலர் வெளிநாடுகளுக்கு!

கொழும்பு, டிசெ.30

விடுமுறையை கழிக்க எம்.பிக்கள் வெளிநாடு களுக்கு புத்தாண்டு விடுமுறையைக் கழிப்பதற்காக இருபதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப் பினர்கள் வெளிநாடுகளில் இருப்பதாக பாராளு மன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் உறவினர்களை சந்திக்கவும், பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை கவனிக் கவும் வெளிநாடுகளில் உள்ளனர்.

வெளிநாடு சென்ற பல பாராளுமன்ற உறுப் பினர்கள் பலர் ஏற்கனவே அண்மைய நாட்களில் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியாவிலுள்ள ஜெனரல் ஹவுஸ் பாராளுமன்ற உறுப்பினர் பங்களாவின் அறைகள் இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜனவரி முதலாம் திகதி வரை பாராளுமன்ற உறுப்பினர் களால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அங்கத்த வர்கள் சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் கிட்டத்தட்ட நூறு எம்.பி.க்கள் அந்த பங்களாவை முன்பதிவு செய் துள்ளதாகவும் பாராளுமன்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக் கெடுப்பு கடந்த 13ஆம் திகதி நடைபெற்றதை யடுத்து, சபாநாயகர் பாராளுமன்றத்தை எதிர் வரும் ஜனவரி 9ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். இதனால் எம்.பி.க்கள் அனைவருக்கும் கிட்டத் தட்ட ஒரு மாதம் விடுமுறை கிடைத்துள்ளது.

தலைவர் பிரபாவின் படம், புலிச் சின்னத்துடன் மாவீரர் தினத்துக்கு சென்றவருக்குப் பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழீழ விடுதலைப் புலி களின் தலைவர் தலைவரது படம் மற்றும் சின்னம் பொறித்த ரீசேர்ட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம் பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய ரீசேர்ட் அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் குறித்து இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றத்தில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளை ஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன், இளைஞரை விடு விப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான விண்ணப் பத்தை மன்றில் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத் தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரை பிணையில் விடு விப்பதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காத தையடுத்து நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது குறித்த இளை ஞரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடைச்சட் டத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரின் சார்பில் சட்டத் தரணி தர்மகுலசிங்கம் அஞ் சனன் முன்னிலையாகி வாதாடி இருந்தார்.

மழையுடனான காலநிலையால் கிளிநொச்சி பெரிதும் பாதிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 30

நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலை யால் கிளிநொச்சி மாவட்டமும் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் மாவட்டத்தில் மழை நின்றும் வெள்ளத்தின் ஏற்பட்ட தாக்கம் குறையவில்லை என மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ள அனர்த்தம் காரணமாக பலர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பல பகுதிகளில் உள்ள மக்கள் மழை முடிந்தும் வெள்ள நீர் வடிந்து செல்லாத நிலையில் தற்பொழுதும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழை காரணமாக சிலரது கிணறுகளில் வெள்ள நீர் மூடி பாய்ந்ததன் காரணமாக கிணறுகள் பகுதி அளவி லும் முற்று முழுதாகவும் அழிவுற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தருமபுரம் பகுதியில் கால் நடை பண்ணை ஒன்றை நடாத்தி வரும் ஒருவர் 50க்கும் மேற்பட்ட கோழிகளும் ஐந்து ஆடுகளும் உயிரிழந்துள்ளதாக கூறியுள்ளார்.

மேலும் தற்பொழுது வெள்ளநீர் வடிந்த பின் தொற்று நோய் காரணமாக நான்கு ஆடுகள் இறந் துள்ளதாகவும், அதில் இரண்டு ஆடுகள் தற் பொழுது கடும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவித்துள்ளார்.

போதை குற்றங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

வடிவேல் சுரேஷ் எம். பி.



பொலிஸ் மா அதிபருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு மேற்படி விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் அறிக்கையையும் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்புமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, டிசெ. 30

பாடசாலைகளிலும் தனியார் வகுப்புகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது போதைப் பொருட்கள் தொடர்பில் ஆதாரபூர்வமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் தற்போது போதைப் பொருட்கள் ஒழிப்பு மற்றும் தெளிவூட்டல் வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் சமீப காலமாக ஒரு சில பாடசாலைகள் தனியார் வகுப்புகளில் இருந்து சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதை பொருட்கள் தொடர்பில் முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன.

இதனை நான் வன்மையாக கண்டிப்பதோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தகுதி, தராதரம் பார்க்காமல் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குரிய பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து மாகாண ஆளுநர்களுக்கும் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் கல்வி செயலாளருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் பிரதி

தலைமைத்துவத்தைத் தெரிவு செய்யும் பொறுப்பு மக்களிடம்!

அமைச்சர் விஜேதாஸ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 30

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் முக்கிய பொறுப்பு அடுத்த வருடம் மக்களிடம் கையளிக்கப்பட வுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆகவே குடும்ப ஆட்சியை மீண்டும் தோற்றுவிக்காமல் மக்கள் தமது பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தவறான ஆட்சியாளர்களிடம் நாட்டை ஒப்படைத்ததன் காரணமாகவே அனைத்து மக்களும் அந்த பாவத்தை அனுபவிக்க வேண்டியேற்பட்டது.

அடுத்த வருடம் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். அதனைக் காலம் தாழ்த்தவோ, மாற்றவோ எவருக்கும் அதிகாரம் இல்லை.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய அறிவுள்ள, சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய சிறந்த தலைவரை தெரிவு செய்ய வேண்டியது மக்களுக்கு வழங்கப்படும் பொறுப்பாகும்.

எனவே மக்கள் அறிவுடன் சிந்தித்து தீர்மானத்தை எடுக்க வேண்டும். மக்களால் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நாம் ஏற்றுக் கொள்வோம்.

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதைக் கூற முடியாது. அது ஜனாதிபதியின் முடிவுக்கமையவே இடம்பெறும்.

எந்த தேர்தலானாலும் நாட்டுக்கு பொருத்தமான ஆட்சியும், தலைமைத்துவமும் தெரிவு செய்யப்பட வேண்டும்- என்றார்.



ஒன்றரை வருடங்களாக சம்பளம் வழங்கப்படாமையால் ஜோர்தானில் சிக்கியுள்ள 350 இலங்கையர்கள்

கொழும்பு, டிசெ.30

ஜோர்தானில் உள்ள சஹாப் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த சுமார் 350 இலங்கையர்களுக்கு சுமார் ஒன்றரை வருடங்களாக சம்பளம் வழங்கப்படாமையால் உணவு கூட இன்றி கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தூதரகத்திற்கு தகவல் வழங்கப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

எனவே உயிர்ச்சேதம் ஏற்படுவதற்கு முன்னர் தம்மை இலங்கைக்கு அழைத்து வருமாறு அதிகாரிகளிடம் அவர்கள், கோரிக்கை விடுக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகும் ஐ.தே.க.!

கொழும்பு, டிசெ. 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியானது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தொடர் கூட்டங்களை நடத்தவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2024 ஜனவரி 19 முதல் தேர்தல் தொடர்பான தொடர் கூட்டங்களை நடத்தும்.

முக்கிய பொதுக்கூட்டத்தை முதலில் கொழும்பில் நடத்துவதற்கு கட்சி தீர்மானித்துள்ளது, அதன் பின்னர் நாட்டின்

ஏனைய பகுதிகளில் மேலும் பல பேரணிகள் நடத்தப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் அது தொடர்பான ஏனைய குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திற்குள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொலை தொடர்பில் இளைஞன் கைது!

அம்பாறை, டிசெ. 30

அம்பாறை - வாங்காமம் பகுதியில் இடம்பெற்ற கொலை சம்பவம் தொடர்பில் 18 வயது இளைஞர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாங்காமம் பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற கொலை சம்பவம் தொடர்பில் ஐவர் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக இறக்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வாங்காமத்தை சேர்ந்த ஆட்டுப் பண்ணை ஒன்றின் உரிமையாளரே கடந்த வெள்ளிக்கிழமை கொலை செய்யப் பட்டிருந்தார்.

ஆட்டுப் பண்ணையை பராமரித்து வந்த அக்கரைப்பற்று காந்தி வீதியைச் சேர்ந்த 18 வயது டைய இளைஞரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் நேற்று முன் தினம் அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆட்டுப் பண்ணை உரிமையாளருடன் இடம்பெற்ற முரண்பாட்டை அடுத்து இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இறக்காமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு;

போலி விளம்பரங்களில் சிக்கிக் கொள்ளாதீர்!

கொழும்பு, டிசெ.30

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலி விளம்பரங்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சரியான முறையில் வெளிநாடு செல்வதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மாத்திரம் இலங்கை அதிகாரிகளால் தலையீடு செய்ய முடியும் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் இலங்கையர்கள் குழுவொன்று இணைய அடிமைத்தனம் என்ற அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கடத்தல் மற்றும் கடல்சார் குற்றப்பிரிவு என்பன விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் மூன்று இலங்கையர்கள் மற்றும் சீன பிரஜை ஒருவர் உட்பட 4 பேரிடம் விசாரணைகள் இடம் பெற்று வருகிறது.

மியன்மாரின் பயங்கரவாத குழு ஒன்றின் முகாமில் 56 இலங்கையர்கள் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப் பட்டு இணைய அடிமைகளாக பணிபுரிந்து வருகின்றனர்.

2022ஆம் ஆண்டு முதல் இலங்கை இளைஞர்கள் இந்த அவலத்தை எதிர்நோக்கி வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு இதற்கு முன்னர் 32 இலங்கையர்களை பல சந்தர்ப்பங்களில் மீட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது மியன்மாரில் இருக்கும் இலங்கையர்களை மீட்பதற்காக வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே யங்கூனில் உள்ள இலங்கை தூதரகத்தின் உதவியை நாடியுள்ளது.

இதற்கிடையில் மியன்மார் பயங்கரவாத முகாமில் சிக்கியுள்ள இலங்கை இளைஞர்களை விடுவிப்பதற்காக ஆறு நாடுகளை உள்ளடக்கிய கூட்டு முயற்சி ஒன்று இடம்பெற்று வருகின்றது.

இந்தியா, பூட்டான், பங்களாதேஷ், மியான்மார், தாய்லாந்து மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் இணைந்து சிறைபிடிக்கப்பட்ட இலங்கையர்களை மீண்டும் தாயகத்திற்கு அழைத்து வருவதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டுப் பொறுப்பு

மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 30

"இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு தார்மீக பொறுப் பேற்க வேண்டும் என உரக்க கூறி வைக்க விரும்புகிறேன். நண்பர் இராதாகிருஷ்ணன் இந்த மகத்தான நிகழ்வை நடத்தி, மலையக தமிழ் மக்களின் வர லாற்று, நிகழ்கால அவலங்களை, உரை, கலை வடிவங்களில் இந்த மேடையில் கூற வைத்து விட்டார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி யின் தலைவர் என்ற முறையில் எனக்கு ஒரு கடப்பாடு இருக் கிறது. வரலாறு, நிகழ்கால அவலங்களுக்கு அப்பால் நாம் இன்று எங்கே, எப்படி நிற்கி றோம், எங்கே, எப்படி போக வேண்டும் என்ற எதிர்காலம் கூற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது."

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் இராதாகிருஷ்ணன் எம்பி தலைமையில் நுவரேலி யாவில் நடைபெற்ற 200 இல் மலையக மாற்றம் விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த் திய மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டின் சிங்கள, ஈழத் தமிழ், முஸ்லிம் சகோதர இனத் தவர் தங்கள் ஓட்டங்களை 1948 லேயே ஆரம்பித்து விட்டார் கள். மலையக தமிழர் தமது குடி யுரிமையை சட்டப்படி முழுமை யாக பெற்றுக்கொள்ளவே 2003ஆம் வருடம் ஆகிவிட்டது. ஆகவே நாம் எமது ஓட்டத்தை தாமதமாக ஆரம்பித்த பிரிவினர் ஆகும். ஆகவே எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார அடைவுகள், சகோதர இனத்த வர்கள் அடைந்துள்ள, இலக்கு களை விட குறைவாக இருப்பது ஆச்சரியம் அல்ல.

ஆனால், இந்த இருபது வரு டங்களில் ஏனையோர் மரதன் ஓடும்போது நாம் நூறு மீட்டர் ஓடி வேகமாக பல முன்னேற்றங் களை கண்டுள்ளோம். எனினும் இன்னமும் நாம் போக வேண்டிய தூரம் கணிசமாக இருக்கிறது.

நாம் அடையவேண்டிய வளர்ச்சியை அடையாமல் குறை வளர்ச்சியில் நிற்கிறோம். மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் பாராளு மன்றம் வரும் போதெல்லாம், 1948இல் இலங்கையின் அந்நிய செலவாணி தொகை ஆசியாவி லேயே ஜப்பானுக்கு அடுத்தபடி யாக அதிகமாக இருந்தது என்று பெருமையாக கூறுவார்.

அது உண்மை. அதன் பின் னுள்ள கசப்பான உண்மை என்ன? அந்த அதிக தொகை அந்நிய செலவாணியை இரத் தம், வியர்வை, கண்ணீர் சிந்தி பெற்று தந்தது நமது மக்களின் தேயிலை, இறப்பர் பெருந் தோட்ட உழைப்பினால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ஆகும். ஆனால், இதற்காக 1948லேயே முதல் சுதந்திர இலங்கை அரசு எமக்கு செய்த கைம்மாறு என்ன? எமது குடி யுரிமையையும், வாக்குரிமை யையும் பறித்து எம்மை நாடற்ற மக்கள் ஆக்கியதே அந்த கைம்மாறு ஆகும்.

1964இல் எம்மை கலந்தா லோசித்து எமது உடன்பாடு களை பெறாமலேயே இந்திய அரசு, எம்மில் பெரும்பான்மை யோரை நாடு கடத்த உடன்பாடு தெரிவித்தது. அன்று ஏற்படுத் தப்பட சிறிமா-சாஸ்திரி ஒப்பந் தம் மூலமாக எமது மக்கள் கால்நடைகள் போல் நாடு கடத்தப்பட்டு, இங்கே நாம் அரசியல்ரீதியாக பலவீனபடுத் தப்பட்டோம். இந்த ஒப்பந்தம் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

1972 வரை நாம் குடியரசு ஆகவில்லை. அதுவரை பிரிட் டிஷ் மகாராணியார் தான் எமது தேசத்தலைவராக இருந்தார். நாம் டொமினியன் சிலோன் என்ற நாடாக இருந்தோம். எம்மை 200 வருடங்களுக்கு முன்னர் இங்கே கொண்டு வந்த வர்களும் அவர்கள்தான். 1948இல் எமது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும், 1964ல் நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப் பட்டபோதும் பிரிட்டிஷ் மகா ராணியார் கண்ணை மூடிக் கொண்டு இருந்தார். இந்த ஒப்பந்தம் பிரிட்டிஷ் அரசால் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

இந்த வரலாற்றின் காரணமாக, எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார் மீக கடப்பாடு இன்று, இந்திய, பிரித்தானிய அரசுகளுக்கு உண்டு. அதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் ரீஷி சுனக் நிறைவேற்ற வேண்டும் எனக்கோருகிறேன். கடந்த வாரம் நானும், இராதா கிருஷ்ணனும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அன்ரூ பற்றிக்கை சந்தித்த போது, இதை நான் அவருக்கு தெளிவாக எடுத்து கூறினேன். அவரது இன்றைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்சின் அரசு எமக்கு உதவிட வேண்டும். இந்தியா வின் கடப்பாடு பற்றி நான் பல முறை இந்திய தலைவர்களிடம் எடுத்து கூறியுள்ளேன்.

இலங்கையின் கடப்பாடு களை ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார் திசாநாயக்க ஆகியோர் நிறை வேற்ற வேண்டும். எனது கருத்தை இவர்களுக்கும் நான் பலமுறை எடுத்து கூறியுள்ளேன் - என்றார்.

கோட்டாவை வீட்டுக்கு அனுப்பியவர் பஸிலே!

திலித் ஜயவீர கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற் படுத்தி நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்காகவே பஸில் ராஜபக்ஷவால் கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டதாக மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித் துள்ளார்.

இதன் விளைவாக ரணில் விக்கிரமசிங்க ஜனா திபதியானார் என்றும், பொதுஜன பெரமுனவும் தேசியவாத முகாமும் அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பஸில் ராஜபக்ஷவின் ஆட்சிக் கவிழ்ப்பினால் ஏமாற்றமடைந்த பொதுஜன பெரமுனவின் உறுப் பினர்கள் குழு தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு 30 வருட காலம் அரசியலில் அனுபவம் உள்ளது. நான் ஒரு தேசியவாதியாகவே எனது அரசியல் பயணத்தை முன்னெடுக்க விரும்பு கிறேன். தேசியவாத அரசியல் தோல்வியடைய காரணம் அதனை முறையாக கையாளவில்லை என்பதாலேயே ஆகும்.

தேசியவாதத்தை தாண்டி ஒரு நாடால் முன் னேற முடியாது. உலகில் உள்ள அனைத்து நாடுகளும் தேசிய வாதத்தை பின்பற்றியதால்தான் அவர்களால் வேகமாக முன்னேற முடிந்துள்ளது.

சிலர் தேசியவாதத்தை இனவாதமாக பயன் படுத்தினர். இதனால்தான் எம்மால் தேசியவா தத்தை கையாண்டு எழுச்சியடைய முடியாது போனது. இந்தியா தேசியவாதத்தை பின்பற்று வதால்தான் இன்று பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துள்ளது-என்றார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்படும்

நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 30

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றில் சமர்ப் பிப்பதாக நீதி அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அச்சட்டமூலத்தில் அவசிய மான திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளது என்றும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் அவர் குறிப பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட் டத்துக்கு மாற்றீடாக அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ வினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலம் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இருப்பினும் இதற்கு பல எதிர்ப்புக்கள் வெளியானதை அடுத்து திருத்த முன்மொழிவு கள் கோரப்பட்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி பாராளு மன்றில் சமர்ப்பிக்க தீர்மானிக் கப்பட்டது.

எவ்வாறாயினும் அன்றைய தினம் இணையப் பாதுகாப்பு சட்டமூலம் மட்டுமே சமர்ப் பிக்கப்பட்டது. எனவே இந்த திருத்தங்கள் அடங்கிய பயங் கரவாத எதிர்ப்புச் சட்டமூ லத்தை ஜனவரியில் சமர்ப்பிப்ப தாக விஜயதாஸ கூறினார்.

யாழில் தொடரும் இணைய மோசடி

மேலும் இருவர் பல இலட்ச ரூபாவை இழந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 30

இணைய மோசடியில் சிக்கி யாழில் மேலும் இருவர் 26 இலட்ச ரூபாய் பணத்தினை இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான விளம் பரங்களை சமூக வலைத் தளங் கள் ஊடாக மோசடிக்காரர்கள் செய்கின்றனர்.

அதனை நம்பி அந்த இணைப்பின் ஊடாக உட்செல் வோர் பணத்தை இழந்து வரு கின்றனர்.

குறித்த மோசடியினால் கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த இருவர் 30 இலட்சம் மற்றும் 16 இலட்ச ரூபாவை இழந்த நிலையில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை ஒருவர் 20 இலட்ச ரூபாயை இறந்துள் ளதாகவும், மற்றையவர் 06 இலட்ச ரூபாயை இழந்துள்ள தாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான இணைய மோசடியாளர்களிடம் சிக்காது மக்கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலி ஸார் அறிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நடிகர் விஜயகாந்தின் மறைவு தமிழக மக்களுக்கு பேரிழப்பு!

செந்தில் தொண்டமான் இரங்கல்

கொழும்பு, டிசெ. 30

"உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர் 'கேப்டன் விஜயகாந்த்' உயிரி ழந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனை அடைந்தேன்" என கிழக்கு மாகாண ஆளுன ரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள இரங்கல் செய்தியில் -

விஜயகாந்த் மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப் பணித்த மனிதர். விஜயகாந்து டன் பல முறை ஏற்பட்ட சந்திப் பின் போது அவருடைய எண் ணங்களிலும் செயல்களின் ஊடா கவும் அவர் ஒரு போற்றப்படக் வேண்டிய தலைவர் என்பதை தான் அறிந்தேன்.

எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன். மேலும் இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்ட இவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பரமற்ற பல உதவிகளை செய்துள்ளார்.

இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணையற்றவர். இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

நடிகர் விஜயகாந்த் அவர் களை இழந்து வாடும் அவரது



குடும்பத்தினருக்கும், நண்பர் களுக்கும், ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறு தலையும் தெரிவித்துக்கொள்வ தோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின் றேன் - என்றுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும்

சரித ஹேரத் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 30

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? அல்லது பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்வைக்கும் தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டு அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஏற்படும். பொருளாதார பாதிப்புக்கும் தனக்கும் எவ்வித தொடர்பு மில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்படுகிறார்.

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வரையறையற்ற வகையில் சர்வதேச பிணைமுறியங்களில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களினால் இலங்கையில் அரசமுறை கடன்கள் நெருக்கடிக்குள்ளானது.

நல்லாட்சி அரசாங்கத்தில் நாடு வங்குரோத்து நிலையடைந்திருக்க வேண்டும். வங்குரோத்து நிலையை ரணில் விக்கிரமசிங்க பிற்போட்டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சியில் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது.

முறையான முகாமைத்துவமில்லாததால் வங்குரோத்து நிலைக்கு செல்ல நேரிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய பொருளாதார பாதிப்பின் ஒரு பங்குதாரர். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? அல்லது பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கான திட்டங்களை முன்வைப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்-என்றார்.

மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து விசேட கவனம்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

"மலையக தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயல்பட்டு வருகிறோம். அவர்களுக்கு காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்." - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதும், இன்று நாடு நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகள் எனவும் எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த இரு இலக்குகளை அடைவதில் தன்னுடன் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதே வேளையில், நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் தேசிய பாடசாலையான குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பாடசாலை மாணவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் புதிய இணையத்தளமும் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு சஞ்சிகையை பாடசாலை அதிபர் ஏ.ஏ சமூனினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி,

"வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்தாலும், வலுவான பொருளாதாரம் இல்லை என்றால், மீண்டும் அதே பிரச்னைகள் தலைதூக்கும். மலையக தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயல்பட்டு வருகிறோம். அவர்களுக்கு காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அமைச்சரவையில் கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். கொவிட் காலத்தில் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரச்னை எழுந்தது. அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏனைய நாடுகள் அது பற்றிய முடிவுகளை பிற்காலத்தில் மாற்றிக்கொண்டாலும், இலங்கையில் அந்த முடிவுகளை மாற்ற நீண்ட காலம் எடுத்தது.

அதற்கான காரணங்களை ஆராய்ந்து, அத்தகைய நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க சட்ட ரீதியான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இறுதிச் சடங்குகளை எப்படிச் செய்வது என்பது அந்தந்த மதத்தின்படி முடிவு செய்யப்பட வேண்டும். இது குறித்து எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்க்கிறேன்." - என்றார்.

கொழும்பிலிருந்து திருமலைக்கு ஜனவரியில் புதிய ரயில் சேவை!

கொழும்பு, டிசெ. 30

கொழும்பு கோட்டையில் இருந்து திருகோணமலை வரை புதிய ரயில் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு ரயில் பாதையில் மஹவ மற்றும் ஓமந்தைக்கு இடையிலான ரயில் பாதையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மஹவ மற்றும் அனுராதபுரம் இடையிலான ரயில் பாதையின் நவீனமயமாக்கல் பணிகள் ஜனவரி 7 முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளதால், அதில் பயணித்த யாழ்தேவி ரயில், கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் பாதைக்கு பயன் படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு விரைவு ரயிலாகும். 6 மணி நேரத்தில் குறுகிய நேரத்தில் இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

இது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காலை 5.45 மணிக்கு பயணித்து திருகோணமலை ரயில் நிலையத்தை முற்பகல் 11.52 க்கு வந்தடையும், அதே ரயில் திருகோணமலை ரயில் நிலையத்தில் இருந்து மதியம் 12.35 மணிக்கு புறப்பட்டு 18.39 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும்.

மக்கள் மீண்டும் ஜனாதிபதியாக ரணிலையே தெரிவு செய்வார்கள்

சாமர சம்பத் தசநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

மக்கள் மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவையே தெரிவு செய்வார்கள் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

மன்னாரில் உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிறுவன பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மன்னார் உப்பு உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் உப்பு உற்பத்தி நிலையத்தின் முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் உப்பு உற்பத்தி நிறுவன அதிகாரிகள் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது குறித்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணி புரியும் பணியாளர்கள் தொழிலாளர்கள் என 150 பேருக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவுகள் காசோலைகளாக வழங்கப்பட்டன.

கொவிட் உப வகை வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிகாட்டலை விரைவில் மக்களுக்கு வழங்கவேண்டும்!

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

கொவிட் 19 வைரஸின் ஜே.என் 1 உப வகை தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழி காட்டல்களை விரைவாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

நாட்டுக்குள் நுழைந்திருப்பதாக தெரிவிக்கப்படும் கொவிட் வைரஸின் புதிய வகை தொடர்பாக சுகாதார துறை மேற் கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் வைரஸ் தொற்றின் புதிய வகை தொற்றான ஜே.என் 1 நாட்டுக்குள் நுழைந்திருப்பதாக நம்புகிறோம். அதனால் விமான நிலையத்தில் இது தொடர்பாக அறிவுறுத்தும் நடவடிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் இந்த வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்பு பெற பின்பற்ற வேண்டிய வழி காட்டல்களை விரைவாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று நீரிழிவு, புற்று நோய், இருதய நோய் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட எச்சரிக்கைக்குரிய குழுவினர் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் செயற்படுத்திய கொவிட் சுகாதார வழிகாட்டல்களை மீண்டும் செயல்வலுப் படுத்துவதற்காக விரைவாக செயற்படுத்துவது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

அத்துடன் இந்த புதிய கொவிட் பிறழ்வு உப வகை தொடர்பாக அவதானமாக செயற்பட வேண்டிய ஒன்று என உலக சுகாதார அமைப்பு கருத்து தெரிவித்திருக்கிறது. கொவிட் உலக தொற்று நிலைமையில் இருந்து மீண்டாலும் இவ்வாறான அலகு வகைகள் எந்த சந்தர்ப்பத்திலும் வெளிப்படக்கூடும். அதனால் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி. இது தொடர்பாக இருந்துவரும் எச்சரிக்கை தொடர்பாக அறிவிப்பு செய்வது முக்கியமாகும்.

குறிப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய குழுவினருக் காவது முகக்வசம் அணிவது, கைகளை கழுவுவது போன்ற சுகாதார செயற்படுகளை மேற் கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு விரைவாக அறிவுறுத்தவேண்டும்-என்றார்.

PUTHIYA KURAL NEWSPAPER CANADA
Official Member of:
caj THE CANADIAN ASSOCIATION OF JOURNALISTS L'ASSOCIATION CANADIENNE DES JOURNALISTES

ENGLISH NEWS
POWERED BY NCM

WWW.PUTHIYAKURAL.CA

Utimus organization to expand nationally, aiding newcomers in Canada with credentials and employment

An Ontario initiative designed to help newcomers earn Canadian credentials and find employment is getting ready to expand to other parts of the country and New Brunswick is on the list of places it wants to set up shop.

Through its network of partners, Utimus which, in Latin, means "we employ," identifies, recruits, trains, mentors, and places newly arrived Canadians in meaningful jobs.

Utimus CEO and founder Brian Macdonald of Fredericton, who is also the previous executive director of Aman Lara, a veterans group which helped thousands of Afghans escape the Taliban and hundreds of Ukrainians escape the Russian invasion, said the plan is to expand nationally over the next year once necessary funding is secured.

"People can go on the website and sign up and when we have a program in New Brunswick, we will reach out to them," Madonald said of Utimus, which was founded in January. "We'll help these new immigrant groups establish a life in Canada and New Brunswick. In order to be successful, you need a job. There are lots of employers in New Brunswick looking for workers."

Macdonald said while Utimus's programs largely involve Afghans and Ukrainians, they're open to anyone from anywhere who has arrived in Canada within the last 10 years.

"We encourage those from other groups to sign up with us and we will put them into our



program streams."

According to the New Brunswick government there are more than 3,500 people of Ukrainian descent living in the province while Statistics Canada reports just over 600 Afghans.

Madonald said Utimus's programs focus on the aerospace and the manufacturing sectors, two areas where there are worker gaps.

According to a news release issued in July by the Ontario government, Utimus was given $833,626 "to prepare 60 unemployed or underemployed Afghan and Ukrainian newcomers for work in the manufacturing sector in Ontario."

"We deal with people who are unemployed or underemployed," Macdonald said. "These refugees are going to be an asset to Canada but they need a little help getting there. We are trying to harness those skills and get them Canadian credentials, Canadian training and then get them a job."

Imdadullah Jabarkhail, an Afghan evacuated to Canada in August 2021, has completed all the stages of the program and is searching for work. He described the training as life-changing.

"I learned a lot from that course," Jabarkhail said. "From the beginning, I didn't know how to make a good resume, for example. We started from there. I can apply everywhere easier right now."

Jabarkhail said the program has given him knowledge and boosted his confidence along the way.

"I feel right now that I am manager of the company," Jabarkhail said. "I feel proud of the teachers and they were so good. When the course was finished, they sent me a certificate."

The program's aerospace element, a partnership with Women in Aerospace (WIA) Canada, Utimus, Immigrants Working Centre, McMaster Manufacturing Research Institute, and The Strong Link (TSL) is helping 60 Afghan, Ukrainian and other new Canadian women find jobs in that sector.

WIA said participants are offered a comprehensive suite of skills development and support to prepare them to work in aerospace manufacturing sectors in Ontario.

"The program design is responsive to the additional and unique barriers faced by those who identify as women and non-binary newcomers, current workforce gaps, and the skill sets required by local employers for the target occupations," WIA said in a news release welcoming immigrant women to the sector.

The Employment Ontario project is funded in part by the federal government and the province of Ontario. It's unclear how much money is involved.

Macdonald said some of the 120 involved in the two programs are now at the point where they are looking for work while some are already employed.


"We are building a network of employers that are interested in helping these people," Macdonald said. "It's great to bring in refugees but we need to get them employed. We are supplying the skills training and the employers that need those skilled workers."

Madonald said those seeking help with his organization are in the process of rebuilding their lives in a new country and in a different language.

"The unemployment rate among the Afghan population is really high – over 90 per cent. Canada has brought 40,000 Afghans to Canada and they're struggling to find employment. There are language issues, cultural issues. A lot of the time, you get a job because of who you know and not what you know. And they don't know anybody. We are trying to help them bridge that gap."

Newcomers can sign up for current and future programs by using the following link: Utimus.com/signup. If selected, there is no fee.

Indian visa agent who allegedly scammed international students to spend the holidays in jail



An Indian immigration agent accused of providing fake college admission letters to international students is scheduled to make his next court appearance in February.

Brijesh Mishra, 37, has spent six months in custody after he was arrested in June by Canada Border Services Agency officers. He faces four federal charges under the Immigration and Refugee Protection Act, with three dating back as early as 2016 in Jalandhar, India, and the remaining one from this year in Surrey, B.C.

Mishra allegedly misrepresented himself as a licensed immigration consultant and advised international students between Jan. 1, 2016 and Feb. 12, 2020, NCM reported in July.

He is expected to remain in jail until his arraignment scheduled for Feb. 9 at Vancouver Provincial Court. At such hearings, those accused are asked to enter a plea of guilty or not guilty.

"Mr. Mishra is in custody since he has not sought his release on bail and has consented to his detention," a spokesperson for the Public Prosecution Service of Canada wrote in an email to NCM.

Mirak Consultants
Immigration and Interpretation Services
We Help Make Canada Your Home
Services through the best and most experienced lawyers:
- Refugee Claims and Appeals
- Temporary Resident Visa (TRV)
- Parent/Grandparent Super Visa
- Family Sponsorships
- Pre-removal Risk Assessment (PRRA) Claims
- Permanent Resident Applications
- Citizenship Applications
- Study/Work Permit Extensions
- Delayed Cases - Mandamus Appeals at the Federal Court

Telephone: 416-276-8173 | 416-800-1152
1225 Kennedy Rd, Unit #2000, Scarborough, ON M1P 4Y1



Fasleem Suhood
CEO & Founder
Experience of 7 years service

புதிய குரல் பத்திரிகை Puthiya Kural Newspaper Publications LLC நிறுவனத்தால் 2023 டிசெம்பர் 30 அச்சிட்டு வெளியிடப்பட்டது.